Registered as a News paper in Ceylon

பல சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily    தேசிய தினசரி

போன் 389

மலர் 5    யாழ்ப்பாணம்    சுபகிருது    மாசி ஆம் நாள் 20    ஷவ்வால் 7    (4-3-63)    தபாற் பெட்டி என் 49

திங்கட்கிழமை    இதழ் 234

ஈழநாடு

சந்தா விபரம்

வாரப்பதிப்பு உட்பட

| | |
|---|---|
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |

# சீன-பாக். எல்லை ஒப்பந்தம்: அமெரிக்கா கவலை

## இந்தியா ஆட்சேபம்

வாஷிங்டன், மார்ச் 3

சீனவும் பாகிஸ்தானும் நேற்று எல்லைஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது சம்பந்தமாக அமெரிக்க ராஜாங்க இலாகா கவலை தெரிவித்துள்ளது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதால் காஷ்மீர் பிரச்சினைக்குத்தீர்வுகாணு முகமாக இந்தியாவும் பாகிஸ்தானும் இம்மாதம் 12-ந் திகதி கல்கத்தாவில் நடத்தவிருக்கும் நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தை பாதிக்கப்படக்கூடுமென்று ராஜாங்க காரியாலயம் கவலை தெரிவித்தது.

சீன-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தம் கைச்சாத்தானதற்கு இந்தியா ஆட்சேபம் தெரிவித்து சீனவுக்கு குறிப்பு ஒன்று அனுப்பியுள்ளது. இதன் (விபரம் மூன்ரும் பக்கம் பார்க்க.)

சீன-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தத்தின் மூலம் சுமார் இரண்டாயிரம் சதுர மைல் பிரதேசம் சீனவுக்குச் சேர்ந்து விடுமென்று இந்திய வெளிவிவகார இலாகா அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆனல் ராவல்பிண்டியில் பாகிஸ்தான் அரசாங்க அதிகாரியொருவர் விளக்கம் தெரிவிக்கையில் பாகிஸ்தான் கோரியதைவிட 750 சதுர மைல் பிரதேசம் மேலதிகமாக பாகிஸ்தானுக்குக் கிடைத்துள்ளதென்ருர்

## விமான விபத்தில் 33 பேர் மரணம்

மணிலா, மார்ச். 3

பிலிப்பைன்ஸில் நேற்று நடைபெற்ற இரண்டு விமான விபத்துக்களில் 33 பேர் கொல்லப்பட்டனர். பிலிப்பைன்ஸ் விமானக் கம்பனிக்குச் சொந்தமான பிரயாணிகள் விமானமொன்று 27 பேருடன் விழுந்து நொருங்கியது. 6 பேருடன் ஹெலிகாப்டர் ஒன்று விழுந்து நொறுங்கியது.

## எல்லைக் காந்தி உண்ணுவிரதம்

லாகூர், மார்ச் 3

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள செஞ்சட்டைத் தலைவரும் 'எல்லைக் காந்தி' என அழைக்கப் படுபவருமான கான் அப்துல்கபார்கான் சிறையில் சாகும்வரை உண்ணுவிரதம் ஆரம்பித்திருப்பதாக ஒருசெய்திகூறுகிறது. ஈத் தொழுகையில் இதர கைதிகள் கலந்துகொள்ள அனுமதியளிக்கப்பட்டதுபோல் தனக்கு அனுமதியளிக்கப் படவில்லையென்றும் சிறை அதிகாரிகளின் இந்த நடத்தையை ஆட்சேபித்தும் கபார்கான் உண்ணுவிரதம் ஆரம்பித்துள்ளதாக அந்தச் செய்தி தெரிவிக்கிறது.

## நடவடிக்கை எடுக்கப்படவில்லை

கொழும்பு, சனி

ஜி. ஸி. ஈ. பரீட்சை வினத்தாள்கள் முன்னதாக வெளியானது சம்பந்தமாக இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

ஜி. ஸி. ஈ. பரீட்சை வினத்தாள்கள் முன்னதாக வெளியானது சம்பந்தமாக கல்வி இலாகாவை சேர்ந்த நோயல் ஸ்ரான்லி என்பவர் கைது செய்யப்பட்டு, கூட்டு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார். எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும் இதுசம்பந்தமாக அட்டோர்ணி ஜெனரல் பகுதியுடன் ஆலோசனை நடத்திவருவதாகவும் சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் டி. டி. அபயவர்த்தன கோர்ட்டில் கூறினர். மேல் விசாரணை ஏப்ரல் மாதம் முதற்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# டில்லி-பீக்கிங் சமாதானயாத்திரை

## இலங்கையருக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, ஞாயிறு

புதுடில்லியிலிருந்து பீக்கிங் நோக்கிப் புறப்பட்டுச் செல்லும் சமாதான யாத்திரையில் சேர்வதற்கு அனுமதிகோரிய இலங்கையர் ஒருவருக்கு, இலங்கை அரசாங்கம் அனுமதி கொடுக்க மறுத்துள்ளது. அரசாங்க கொள்கையின் பேரிலேயேதான் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

சீனவுக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள எல்லைத்தகராற்றை தளர்த்தும் பொருட்டு புதுடில்லியிலிருந்து பீக்கிங் நோக்கி புறப்பட்டுச் செல்லும் சமாதான அணியில் கலந்துகொள்ளவரும்படி யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த திரு. பி. நவரத்தினத்துக்கு சமாதானஅணி தலைவரிடமிருந்து அழைப்பு வந்திருந்தது. இதைத் தொடர்ந்து, சமாதான அணியில் சேருவதற்கு திரு. நவரத்தினம் இலங்கை அரசாங்கத்திடம் அனுமதி கேட்டிருந்தார். ஆனல் அனுமதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து, தனது பிரயாணத்தை திரு. நவரத்தினம் இப்பொழுது ரத்துச் செய்துள்ளார்.

இதுசம்பந்தமாக திரு. நவரத்தினம் தெரிவிக்கையில், சமாதான அணியில் கலந்துகொள்ளும்படி தமக்கு அழைப்பு வந்திருந்ததென்றும் ஆனல் அரசாங்கம் தனது விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள மறுத்ததாலும் 'எக்சேஞ்' கட்டுப்பாடு காரணத்தாலும் இப்பொழுது தமது பிரயாணத்தை ரத்துச் செய்துள்ளதாயும் கூறினர்.

இலங்கை சமாதான சபையின் தலைவரும், உணவு, வர்த்தக, கப்பல் மந்திரியுமான திரு. டி. பி. இலங்கரத்ன எனது விண்ணப்பத்திற்குச் சிபார்சு செய்திருந்தார். ஆனல், நிதி மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகெல்ல, அனுமதிகொடுக்க மறுத்துவிட்டார். தலைமன்னரிலிருந்து தனுஷ்கோடிக்குச் செல்வதற்கு டிக்கட் செலவாக ரூ. 3 செலுத்துவதற்கு மட்டுமே நான் கடைசியாக அரசாங்கத்திடம் கேட்டிருந்தேன். இதுகூட மறுக்கப்பட்டுவிட்டது என்றும் அவர் கூறினர்.

# மாவிட்டபுரத்தில் ஒருவர் சுட்டுக் கொலை

## மற்ருெருவர் படுகாயம்

மாவிட்டபுரம், ஞாயிறு

மாவிட்டபுரம் மடத்தடி ஒழுங்கையில் நேற்று மாலை நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோக சம்பவத்தில் ஒருவர் ஸ்தலத்தில் மரணமானர். மற்ருெருவர் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிருர். இச்சம்பவம் சம்பந்தமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை மூன்று மணியளவில் மாவிட்டபுரம் தச கடவை மடத்தடி ஒழுங்கையில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் வினயர் கதிரவேலு என்னும் விவசாயி ஸ்தலத்தில் மரணமானர். காங்கேசன்துறை ஆஸ்பத்திரி அட்டெண்டன் கந்தையா நவரத்தினம் என்பவர் படுகாயங்களுடன் உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் சம்பந்தமாக மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் இன்று காலை ஸ்தலத்திலும் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியிலும் விசாரணை நடத்தினர்.

சம்பவம் நிகழ்ந்த இடத்தை நீதிபதி பார்வையிட்டபோது நீதிபதியிடம் பொலிஸ இன்ஸபெக்டர் பின்வருமாறு சந்தேக நபர்கள் கூறியதைத் தெரிவித்தார்.

"காலஞ்சென்ற கதிரவேலுவும் காயமடைந்த நவரத்தினமும் நேற்று மாலையில் குடிவெறியில் தமது வீட்டுக்கு வந்தனர். நவரத்தினம் வெளியே நிற்க கதிரவேலு குசினிக்குள் நுழைந்து சட்டி பானைகளை உடைத்துவிட்டு பாலசிங்கத்தைக் கத்தியால் குத்த முயன்ருர். கத்திக் குத்து முதுகில் பட்டது. பின்னர் பாலசிங்கம் மேசைக்கத்தியைப் போன்ற வாளையும் மற்ற சகோதரர்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

# கார்ப்பரேஷன் ஊழியருக்கு அரசாங்க சலுகைகள்

## பரந்தன் இரசாயன சங்கம் கோரிக்கை

பரந்தன், ஞாயிறு

'அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகள், சலுகைகள் யாவும் அரசாங்க உதவிபெறும் கார்ப்பரேஷன்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.'

அண்மையில் நடைபெற்ற பரந்தன் ஐக்கிய இரசாயன ஊழியர் சங்கக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு பரந்தன் இரசாயன கார்ப்பரேஷன் தலைவருக்கு அனுப்பப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:-

"அரசாங்க உதவிபெறும் கார்ப்பரேஷன்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு புகையிரத பிரயாண சீட்டு (வாறண்ட்) கொடுக்கப்படவேண்டும். இக்கார்ப்பரேஷன்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு உடுப்புகள் வழங்கவேண்டும். காவற்காரர்களுக்கு மாதச் சம்பளம் வழங்கவேண்டும்.

பரந்தன் இரசாயன தொழிற்சாலையில் உள்ள 'எவபரேட்டரில்' ஏற்பட்டிருக்கும் கோளாறு காரணமாக விசாரணை செய்வதற்கு விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்படவேண்டும்."

## வரி விளம்பரம்


### தேவை

பனியன் பாக்டரியில் வேலை செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. வேலை தெரிந்தவர்களுக்கு விசேஷ சலுகை உண்டு. நேரில் வரவும். Mrs. மனோன்மணி செல்லையா, 46, பிரவுன் ரோட், யாழ்ப்பாணம். 739

### விற்பனை

கொக்குவில் மேற்கு உயரப்புலத்தில் ஆனைக்கோட்டை - குளப்பிட்டி ரோட்டுக்கரையிலுள்ள, வீடுகட்ட மிக உகந்த ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. விபரங்களை பின் வரும் விலாசத்தில் அறிந்துகொள்ளலாம். ப. இலங்கைநாயகம், 11, ஓடைவீதி, ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணை. 740

### தேவை

யாழ்ப்பாணம் மாநகரசபை ஊழியர் சங்கத்தின் தேநீர்சாலையை (Canteen) நடாத்துவதற்குத் தகுந்த வாய்ந்தவர்களிடமிருந்து 13-3-63-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்களுக்கும் இதர விபரங்களுக்கும் கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரிலோ கடித மூலமோ தொடர்பு வைக்கவும். சி. பொன்னுத்துரை, கௌரவ காரியதரிசி, யாழ்ப்பாண மாநகரசபை ஊழியர் பொதுநலச்சங்கம், மாநகர சபை அலுவலகம், யாழ்ப்பாணம்.
2-3-1963 741

### விற்பனைக்கு

சாவகச்சேரித் தபால் நிலைய வீதியில், மகளிர் கல்லூரிக்கருகாமையில் எட்டு பரப்புக் குடியிருக்கும் காணி தென்னை மரங்களுடன் உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: நா. சின்னத்தம்பி, தபால்நிலைய ரோட், சாவகச்சேரி Eco 3

### நோய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனாம். நொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.
வைத்தியர் பரிபூரணாநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


# மாணவர் பற்றி மாவட்ட நீதிபதி

யாழ்ப்பாணம், திங்கள்

'இன்றைய மாணவர்களின் எதிர்காலநிலை மிகவும் சிக்கலானது. மாணவர்கள் தமது உடல்,உள்ள நிலைகளுக்கேற்ப உயர்தரக்கல்வி, தொழிற்கல்வி என்பனவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தமது தாய் மொழியுடன் அயல் மொழிகளையும் கற்றிருப்பது மாணவர்களுக்கு மிகவும் பயன் தரக்கூடிய செயலாகும்' என்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் கன்னாகம்ஸ்கந்தவரோதயக்கல்லூரி உயர்வகுப்பு மாணவர் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: மாணவர்கள் வீட்டில் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து நல்லொழுக்கமுடையவர்களாக வாழவேண்டும். ஒழுக்கமே வாழ்வின் சிறப்புக்கு காரணமாகும். மாணவர்கள் தமது இன்றைய நிலையையும் எதிர்கால நிலையையும் நன்கு சிந்திக்க வேண்டும்.

திரு. டொமினிக் ஜீவா இலக்கிய சம்பந்தமாக உரை நிகழ்த்தினார்.

# செய்தித்திரட்டு

## பகவத்கீதை சொற்பொழிவுகள்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை திவ்யஜீவன சங்க ஆதரவில் இயங்கிவரும் சிவானந்த கலாநிலையத்தில் பேராசிரியர் திரு. எஸ். ஆர். துரைசாமி சாஸ்திரிகள் திங்கட்கிழமை தொடக்கம் மாலை வேளைகளில் "பகவத்கீதை" பற்றிய சொற்பொழிவுகளை நடாத்தவிருக்கின்றார். தொடர்ந்து சில தினங்கட்கு நிலையத்தில் தங்கி இருக்கும் திரு. துரைசாமி சாஸ்திரிகள் பகலில் சமஸ்கிருத, தத்துவ சாஸ்திர வகுப்புக்களையும் நடாத்துவார்.

∴ ∴ ∴

## பிரிவுபசாரம்

பருத்தித்துறை, ஞாயிறு

கட்டைவேலி ஞானசாரிய கல்லூரியில் உதவி ஆசிரியராக இரண்டாண்டுகளாகக் கடமையாற்றிய திரு. ஆசீர்வாதம் லோறன்ஸ் பெரியபுலம் மெ. மி. பாடசாலைக்கு மாற்றப்பட்டதையொட்டி மேற்படி கல்லூரி ஆசிரிய மன்றம் பிரிவுபசார விழா வொன்றை நடத்தியது.

∴ ∴ ∴

## கட்டட பொறுப்பு

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை தொகுதியைச் சேர்ந்த பொலிகண்டியில் கடற்றொழிலாளர்கட்காக அரசாங்கத்தால் உருவாக்கப்படும் வீட்டுத்திட்டத்தின் 25 வீடுகளையும் கட்டிக்கொடுக்கும் வேலைப் பொறுப்பை புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜம் பொறுப்பேற்றிருப்பதாக தெரியவருகிறது. தனித்தனி சுமார் 3500 ரூபா பெறுமானமுடைய இவ்வீட்டு வேலைகள் விரைவில் ஆரம்பமாகும் என கூறப்படுகிறது.

∴ ∴

## திருமுறை வகுப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தில் அண்மையில் கூட்டுப்பிரார்த்தனைச் சபையின் சார்பில் சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி திருமுறை வகுப்பை ஆரம்பித்து வைத்தார். இவ்வகுப்பு வெள்ளி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் மாலை 4 மணி முதல் 5 மணி வரை நடைபெறும். தேவார திருவாசகங்களைப் பண்முறைப்படி ஓதுவதற்கு இவ்வகுப்பு உதவி புரியும்.

∴ ∴ ∴

## புதிய 25 சதம்

கொழும்பு, ஞாயிறு

புதிய 25 சத நாணயங்கள் சில நாட்களில் வெளிவரவிருக்கின்றன. புதிய நாணயங்கள் தற்போதுள்ள நாணயத்தைப் போலவேதான் இருக்கும். ஆனால் சுற்றளவு சிறிதாகவிருக்கும்.

∴ ∴ ∴

## கோயிலில் களவு

யக்கலை, ஞாயிறு

வல்கம்முல்லை கோயிலில் ரூ. 300ரொக்கமும், சிலசமயப் புத்தகங்களும் திருடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

∴ ∴ ∴

## அபராதம்

வாழைச்சேனை, ஞாயிறு

ஓட்டுமாவடியைச் சேர்ந்த எம். எம். முஹைதீன் என்பவர் லைசென்ஸ் இல்லாமல் பியர் விற்பனை செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு ரூ. 400 அபராதம் விதிக்கப்பட்டது.

∴ ∴ ∴

## வீதி விபத்து

தம்பதெனியா, ஞாயிறு

தம்பதெனியா மெட்டியகன என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு மோட்டார் விபத்தில் இருவர் மரணமானார்கள்.

∴ ∴ ∴

## விளக்குகள் திருட்டு

குருநாக்கலை, ஞாயிறு

குருநாக்கலையிலுள்ள பொது இடங்களில் தினமும் மின்சார விளக்குகள் திருட்டுப் போவதாக அறிவிக்கப்படுகிறது.

∴ ∴ ∴

## மறைந்தகார்

கண்டி, ஞாயிறு

கண்டியைச் சேர்ந்த திரு. மொஹமட் அஸீஸ் அலிக்குச் சொந்தமான கார் ஒன்று அண்மையில் களவாடப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் கார் கட்டுகஸ்கோட்டையிலிருந்து மூன்று மைல் தூரமுள்ள ஒரு இடத்தில் இருக்கக்கண்டு பிடிக்கப்பட்டது.

∴ ∴ ∴

## ஐஸ்தொழிற்சாலை

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறையிலிருந்து 20 மைல் தூரமுள்ள தாழையடி என்ற இடத்தில் ஒரு ஐஸ் தொழிற்சாலையை நிறுவ முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

∴ ∴ ∴

## அன்பளிப்பு

களனி, ஞாயிறு

செக்கோஸ்லேவேகியா அரசாங்கத்தின் சார்பில் செக்கோஸ்லேவேகியா ஸ்தானிகர் காரியாலயத்தைச் சேர்ந்த கலாச்சார காரியதரிசி திரு. வி. பிளின்கர், வித்தியாலங்காரபல்கலைக்கழகத்துக்கு நூற்றுக்கும் அதிகமான விஞ்ஞான புத்தகங்களை அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார்.

∴ ∴ ∴

## கோர்ட்டில் திருட்டு!

நுவரேலியா, ஞாயிறு

நுவரேலியா மாவட்ட கோர்ட்டில் திருட்டு நடைபெற்றுள்ளது. சில திருடர்கள் கோர்ட்டுக்குள் நுழைந்து ஒரு மூடை அரிசியைக் களவாடிச் சென்றுள்ளனர், ஒருவழக்கு சம்பந்தமாக இந்த அரிசி மூடை கோர்ட்டுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

# 'காலஞ்சென்றவருக்கு காக்கா வலிப்பு இருந்தது'

## அராலி கொலை வழக்கு

## குறுக்கு விசாரணையில் பதில்

யாழ்ப்பாணம், திங்கள்

அராலி வாலையம்மன் கோவிலில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் திகதி அராலியைச் சேர்ந்த நல்லையா பேரம்பலம் என்பவரைக் கொலை செய்ததாக அதே ஊரைச் சேர்ந்த அப்பாக்குட்டி பாலசிங்கம், அப்பாக்குட்டி அன்னலிங்கம் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் சனிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிகள் சார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு.கே. வி. எஸ். சண்முகநாதன் உதவியுடனும், திரு. விஸ்வநாதனின் அனுசரணையுடனும் ஆஜரானார்.

கலஞ்சென்ற பேரம்பலத்தின் தந்தையாகிய வேலுப்பிள்ளை செல்லையா, தனது மகனை வலிக்கு வைத்தியம் செய்ய, காசிப்பிள்ளையிடமோ சுப்பிரமணியத்திடமோ, குமாரசாமியிடமோ போகவில்லையென்றார்.

ஜி. ஜி: பொலிஸ் வாக்குமூலத்தில் மகனுக்கு வலிப்பு வாறதாகக் கூறியிருக்கிறீர்?

சாட்சி: இல்லை.

நீதிபதி: பொலிஸாரிடம் வாக்குமூலம் எத்தனை தடவை கொடுத்தீர்? ஒருதரமா? இரண்டுதரமா?

ஜி. ஜி: மூன்றுதரமா?

சாட்சி இல்லை. இரண்டுதரம்.

வைத்திலிங்கம் என்பவர் சாட்சியமளித்தபோது இரவு எட்டு மணிக்கு கோயிலுக்குப் போனதாகவும், ஏராளமான ஜனங்கள் கோவிலிலிருந்ததாகவும்,நல்லையா பேரம்பலத்தை காணவில்லையென்றும் கூறினார்.

ஜி ஜி: காலஞ்சென்றவர் உயக்குச் சொந்தமா?

சாட்சி: ஆம். மச்சானின் மகன்.

ஜி. ஜி: இரண்டு எதிரிகளையும் தெரியுமா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: இறந்தவருக்கு காக்கை வலிப்பு வருவது தெரியுமா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: வலிப்புக்கு வட்டுக்கோட்டையில் வைத்தியம் செய்தாரா?

சாட்சி: ஆம்.

நல்லையா நவரத்தினம் சாட்சியமளித்தபோது, காலஞ்சென்றவர் தனது சொந்தத் தம்பியென்றும், பிரேதத்தைத் தாம் அடையாளம் கண்டதாகவும் கூறினார்.

ஜி.ஜி: உமக்கும் வலிப்புவாறதல்லவா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: உண்மையைச் சொல்லும். நீர் படிக்கும்போது வலி வாறதல்லவா?

சாட்சி: இல்லை.

பொலிஸ் கான்ஸ்டபிள் சல்கொட ஆராச்சியும், கல்முனியும் சாட்சியமளித்தார்கள்.

கோர்ட்டிற்கு உள்ளேயும் வெளியேயும், திரு. ஜி ஜி. யின் குறுக்கு விசாரணையைப் பார்ப்பதற்கு, பெண்கள் உட்பட ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். ஜனங்கள் வழியைத் தடைசெய்து நின்றபோது வாசலைவிட்டு விலகி நிற்கும்படியும், அல்லது வெளியில் நிற்கும்படி நீதிபதி கூறியபின், வாசலைவிட்டு விலகினார்கள்.

விசாரணை இம்மாதம் 9-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# ஜெனிவா மகாநாடு

ஜெனிவா, மார்ச் 3

ஜெனிவாவில் நடைபெறும் 17 தேசப் படைகுறைப்பு மகாநாட்டில் கலந்து கொள்ளும் அமெரிக்கத் தலைமைப் பிரதிநிதி ஜனாதிபதி கென்னடியுடன் கலந்தாலோசனை செய்வதற்காக நேற்று வாஷிங்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அணுஆயுத பரீட்சையை ஸ்தலத்தில் மேற்பார்வை செய்வது சம்பந்தமாக அமெரிக்காவின் கோரிக்கையைத் தளர்த்துவதுபற்றி ஜனாதிபதியுடன் இவர் கலந்தாலோசனை நடத்தக் கூடுமெனத் தெரிகிறது.


## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7ம் பிரிவின்படியான அறிவித்தல்

கடித இலக்கம்: எல். டி. 3622.

கீழே விவரிக்கப்படும் காணி, காணி எடுத்தற்சட்டத்தின் கீழ் எடுக்க உத்தேசித்திருக்கிறது, என்பதை இத்தால் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

முழுவிபரங்களையும் 1-3-1963-ம் திகதியில் வெளியாகும் அரசாங்க வர்த்தமானப்பத்திரிகை (IIIம் பாகம்)யில் பார்க்கவும் (இலக்கம் 13,539).

விபரம்

மாவட்டப்பிரிவு:- மட்டக்களப்பு.
கிராமம்:- திக்கோடை.
காணியின் பெயர்:- தீலையடிவளவு, சின்னத்தும்பாலை, பெரியதும்பாலை அதிர்முன்மாரி, புதுமுன்மாரி, இத்தியடி முன்மாரி, இத்தியடிபங்கு, வாடிப்பங்கு.
படமும், துண்டும்:- எ. 1337 பிரதம படத்திலுள்ள 2,3,4,5,6,8,9,10,11,12, 13,14,15,16,17-ம் துண்டுகளும்.

T. A.C Ludowyk
மாவட்ட உதவி அதிபரும், காணி எடுத்தல் அதிகாரியும்.

## காணி எடுத்தற் சட்டம் (460-ம்) அத்தியாயம் 7-ம் பிரிவின்படியான அறிவித்தல்

எனது இல. எல் ஜ/ எ சி| 36

கீழ்க்காணும்அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானி (பகுதி III) இல. 13,539 யைப் பார்க்கவும்.

அட்டவணை

கிராமத்தின் பெயர்:- குமுளமுனை.
காரியாதிகாரியின் பிரிவு:- கரைதுறைப்பற்று,
காணிகளின் பெயர்:- நாவலடிவளவும், யாவறணவளவும்.
பிரதமப் படம்:- பி. பி. எ. 2359.

ஒப்பம்: செ பொஸ்ரர்
வவுனியா, அரசாங்க அதிபருக்காக.

## 1963, பெப்ருவரி 2-ந் தேதியைக் கொண்ட 13,511-ம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமான 1952-ம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களின் ஈ தலைப்பில் 3-ம் பிரிவின் 4அ(4) இலக்கப் பிரமாணத்தின்பிரகாரம் இடப்படும் அறிவித்தல்.

என் 4691 1963ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 16-ந்தேதி பிரசுரமான 13,525ம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியான 16-2-63ந் தேதியைக் கொண்ட எனது அறிவித்தலின் பிரகாரம் கோரப்பட்ட விரங்களை நிறைவுபடுத்தி அனுப்புவதற்கு அளிக்கப்பட்ட இரண்டு வாரகால எல்லையை இத்தால் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் தேதி தொடக்கம் மேலும் இரண்டுவார காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

உறுதியுரை பின்வரும் பல்வேறு தலைப்புக்களின் கீழ்விபரங்களடங்கியதாயிருத்தல் வேண்டும்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|
| சொந்தக்காரரின்பெயரும் குடியிருப்பாளரட்டவணைப் பத்திர இலக்கமும். | குத்தகைக்குப் பயிர்செய்பவரின் பெயரும் குடியிருப்பாளரட்டவணைப்பத்திர இலக்கமும் | சொந்தக்காரரின் அல்லது குத்தகைக்குப் பயிர் செய்பவரின் நிரந்தரவதிவிடமும், கிராமத்தலைமைக்காரரின் பிரிவும். | நெற்காணியின் பெயர் | நெற்காணியின் விஸ்தீரணம். | நெற்காணி அமைந்துள்ள இடம். | காணிச்சொந்தக்காரரினதுகுடும்பத்தைச்சேர்ந்தோர் அனைவரதும், குத்தகைக்குச் செய்பவரின் குடும்பத்தைச் சேர்ந்தோர் அனைவரினதும் பெயர்கள் | கடந்த இரு போகங்களின்போது கிடைத்த விளைச்சலின் அளவு | தற்போதையத் போகத்தில் எதிர்பார்க்கப்படும் விளைச்சலின் அளவு. |

குறிப்பு:- முன்னர் நான் விடுத்த அறிவித்தலுக்கேற்ப, இதுவரை விபரங்களைச் சமர்ப்பித்த நெற்காணியை உடையவர்களும், குத்தகைக்கு பயிரிடுபவர்களும் மீண்டும் இவ்வறிவித்தலின் கீழ் கோரப்படும் விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை.

எம். எல் பெரேரா,
பதில் உணவுக்கட்டுப்பாட்டதிகாரி.

கொழும்பு 2. மார்ச் 1, 1963.

# பாக்.-சீன ஒப்பந்தம் -சீனவுக்கு இந்தியா ஆட்சேபக்குறிப்பு

## பாகிஸ்தானுடன் சீனவுக்கு பொது எல்லை கிடையாது என விளக்கம்

புதுடில்லி, மார்ச் 3

சீன-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தம்பற்றி சீனவுக்கு இந்திய அரசாங்கம் ஆட்சேபக்குறிப்பு ஒன்றை உடனடியாக அனுப்பி வைத்துள்ளது. சீன-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தம் நேற்று பீக்கிங்கில் கைச்சாத்தானது. இந்த ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜனுப் புட்டோவும் சீனவெளிவிவகார மந்திரி மார்ஷல் சென்-யீயும் கைச்சாத்திட்டனர்.

### குறிப்பு விபரம் வெளியாகவில்லை

எல்லை ஒப்பந்தம் சம்பந்தமாக சீன அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் அனுப்பியுள்ள ஆட்சேபக் குறிப்புப்பற்றிய விபரம் வெளியிடப்படவில்லை என்றாலும் பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் எல்லைசம்பந்தமாக ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு சீனவுக்கோ பாகிஸ்தானுக்கோ உரிமை கிடையாதென்றும் இந்த ஒப்பந்தத்தை இந்தியா ஏற்றுக் கொள்ள மாட்டாதென்றும் இந்த ஒப்பந்தம் இந்தியாவை எந்த விதத்திலும் சட்டப்படுத்தமாட்டாதென்றும் தெரிவித்திருப்பதாகக் கருதப்படுகிறது.

### இந்தியத் தூதர் சந்திப்பு

பீக்கிங்கிலுள்ள இந்திய தூதரகப் பொறுப்பதிகாரி திரு. பி. சே. பானர்ஜி பாகிஸ்தான் வெளிவிவகாரமந்திரி ஜனுப் புட்டோவைச் சந்தித்துப் பேசினர்.

### பாக்.—சீன எல்லை ஒப்பந்தம்

சீனவின் சிக்கியாங் பகுதியும் பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பகுதி எல்லையும் சம்பந்தப்பட்டது இந்த ஒப்பந்தம். இந்த ஒப்பந்தம் தற்காலிகமானதென்றும் பாரம்பரிய வழமையான எல்லைக்கோட்டின் அடிபபடையில் எல்லைகளை நிர்ணயித்துக் கொள்ள இருதரப்பினரும் ஒப்புக் கொண்டனரென்றும் அறிவிக்கப்படுகிறது. 300 மைல் நீளமான எல்லை சம்பந்தமான இந்த ஒப்பந்தத்தில் ஒன்பது அம்சங்கள் உள்ளன. இந்திய-பாகிஸ்தான் பேச்சுவார்த்தைகளின் பின் இப்பகுதி எவரின் நிர்வாக ஆட்சி உரிமையாகிறதோ அந்தநாடு சீனவுடன் இப்பகுதி எல்லைபற்றி பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமாம். இந்த ஒப்பந்தம் உடனடியாக அமுலுக்கு வருகிறது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட வைபவத்தில் ஜனுப புட்டோ பேசுகையில், இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீர்பற்றி நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்க வேண்டுமென்பதே பாகிஸ்தானின் விருப்பமென்றார்.

### இந்தியா யுத்த ஆயத்தம்

இந்த வைபவத்தில் மார்ஷல் சென்-யீ பேசுகையில் இந்தியா யுத்தத்துக்குத் தயார் செய்து வருகிறதென்றும் அந்நிய வல்லரசுகளிடமிருந்து ஆயுதங்களை வாங்கிக் குவிக்கிறதென்றும் குற்றஞ்சாட்டினர்.

### வாஷிங்டன் அபிப்பிராயம்

சீன—பாகிஸ்தான் எல்லை உடன்படிக்கை சம்பந்தமாக இந்தியா சீனவுக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுடன் எல்லை சம்பந்தமாக சீன கைச்சாத்திட்டிருப்பதை ஆட்சேபித்து சீனவுக்கு இந்தியா அனுப்பியுள்ள குறிப்பொன்றில்; பாகிஸ்தானுடன் உரிமை கொண்டாடுவதற்கு சீனவுக்கு எந்தவிதமான உரிமையில்லையென்றும், பாகிஸ்தானில் எந்த எல்லையையும் சீன கொண்டிருக்கவில்லையென்றும் தெரிவித்துள்ளது

ஆனல், வாஷிங்டனில் ராஜாங்க காரியாலய அதிகாரியொருவர் இது சம்பந்தமாகத் தெரிவிக்கையில், பீக்கிங்கில் கையெழுத்திடப்பட்ட சீன-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தம், பாகிஸ்தானின் நலன்களைக் காத்திருக்கிறதென்றும், பாகிஸ்தானுடன் இந்தியா, காஷ்மீர் சம்பந்தமாக நடாத்தும் பேச்சுவார்த்தைகளை, சீன-பாகிஸ்தான் எல்லை உடன்படிக்கைக் காலம் பாதிக்குமென்றும் கூறினர்.

---

# 'இந்தியாவுடன் பாகிஸ்தான் வேற்றுமை காட்டுகிறது'

## பிரதமர் நேரு கருத்து

புதுடில்லி, மார்ச் 2

பாரத—சீன எல்லைத் தகராற்றை, பாகிஸ்தான் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயற்சிக்கிறது. என்று நேற்று ராஜஸ்தானில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பாரதப்பிரதமர் நேரு பேசுகையில் கூறினர்.

### 'இந்தியாவுடன் வேற்றுமை'

சீனவுக்கும் பாரதத்துக்கும், எல்லைவிஷயமாக தகராறுகள் இருந்துகொண்டிருக்கையில், பாகிஸ்தான் சீனவுடன் எல்லை விஷயமாக உடன்படிக்கை செய்துகொண்டதைக் கவனித்தால், பாகிஸ்தான் நம்முடன் வேற்றுமையைத்தான் காட்டுகிறது. என்பது நன்கு தெளிவாகத் தெரிகிறது. என்று கூறிய பாரதப்பிரதமர் நேரு, பாகிஸ்தான் என்ன நினைத்திருந்தாலும் காஷ்மீர் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளைப் பாரதம் தொடர்ந்து நடத்துமென்றும் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், எம்முடன் படையெடுப்பதென்பது மட்டும் சீனவின் நோக்கமல்லவென்றும் மற்றைய நாடுகளையும் அடக்கி ஆழவேண்டுமென்பதுதான் சீனவின் உட்கருத்தாகும் என்றும் கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது: "கொழும்பு நாடுகள் தெரிவித்த யோசனைகளை சீன ஏற்றுக்கொள்ளுமா என்பது சந்தேகத்துக்கு இடமாக இருக்கிறது. சீனரின் இப்போதைய போக்கை கவனித்தால், நாளைக்கு என்னநிகழும் என்று சொல்லமுடியாமலிருக்கிறது.

### ஆக்கிரமிக்கிறது

சீன, இப்பொழுதும் ஆக்கிரமித்துக்கொண்டுதான் இருக்கிறது. நம்மை மிரட்டலின்மூலம் ஏமாற்ற நினைக்கும் சீனவின் செய்கைகள் குறித்து நாம் சிறிதும் பயப்படமாட்டோம். சீனப்படையெடுப்பு, பாரத மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திவிட்டது.

ராணுவத்தினருக்குத் தேவையான சகலதையும் நாம் உற்பத்திசெய்யவேண்டும். மூலைக்கு மூலை தூங்கிக்கிடக்கும் கலப்பைகளுக்கு நாம் வேலை கொடுக்கவேண்டும். புதிய வேளாண்மை முறைகளை நாம் கைக்கொள்ளவேண்டும். பாலைவனங்களாகக் காட்சிதரும் இடங்கள் சோலைவனங்களாக மாறவேண்டும்."

இந்தக்கூட்டத்தில், இந்திய பாதுகாப்பு நிதிக்கென 80,000 கிராம் தங்கம், பாரதப் பிரதமர் நேருவிடம் வழங்கப்பட்டது.

---

## இந்திய துருப்பினர் திரும்பினர்

புதுடில்லி, மார்ச். 3

காங்கோவில் ஐ. நா. படையில் பணியாற்றிய இந்திய அணியின் ஒருபகுதித் துருப்பினர் நேற்று விமானத்தில் புதுடில்லி வந்துசேர்ந்தனர்.

## கல்வித்துறை தூதுகோஷ்டி

புதுடில்லி, மார்ச். 3

ஐக்கிய அரபுக் குடியரசிலிருந்து கல்வித்துறையைச் சேர்ந்த மூவர் கோஷ்டியொன்று நேற்று இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காகப் புதுடில்லி வந்து சேர்ந்தது.

---

# "ஒத்துழைப்புக்கொடுக்க வேண்டியது நாம்தான்"

## மகாதேசாதிபதி விஜயம் பற்றிமாநகரசபை அங்கத்தவர்

யாழ்ப்பாணம், திங்கள்

அரசாங்கம் நமக்கு நன்மை செய்ய முனையும்போது அதனை நாம் முழுமனதுடன் வரவேற்க வேண்டும். தீமை செய்யும்போது எதிர்க்க வேண்டும். மகாதேசாதிபதியை நாம் கண்ணியமாகவும் கௌரவமாகவும் மதிக்க வேண்டும்" என்று யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவர் திரு. கே. எஸ். நடராஜா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் சொல்லப்பட்டிருப்பதாவது:

கவர்னர் ஜெனரலின்யாழ்ப்பாண விஜயத்தையொட்டி தமிழரசுக்கட்சியினர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். மகாதேசாதிபதியின் விஜயத்தைப் பகிஷ்கரிக்க இத்தீவில் எவருக்காவது உரிமை கிடையாது. அவர் பலபல பகுதிகளுக்குச் சென்று நேர்முகமாக விஷயங்களை அறிந்துதான் தமது நிர்வாகத்தை நடத்த வேண்டும். தமிழரின் குறைநிறைகளை இப்படியான சந்தர்ப்பங்களில் அவர் அறிந்து ஆவன செய்ய வேண்டும் தமிழரின் உரிமையைக் கொடுக்காத அரசாங்கத்தின் அதிகாரி என்று நாம் அவரைப் புறக்கணிக்கக் கூடாது.

சமஷ்டிக் கட்சியினருக்குப் போட்டி இங்கு இருக்கவில்லையா? அவர்கள் தம்மை சர்வாதிகாரிகளாக்கி தமது எண்ணப்படிதான் தமிழ் உலகினர் ஒழுக வேண்டுமென்ருல் சிங்கள அரசாங்கம் செய்யும் காரியங்களில் என்ன பிழை இருக்கின்றது? ஒரு பொறுப்பு வாய்ந்த விஷயத்தில் சகல கட்சிகளையும் ஒன்றுகூட்டி ஆலோசிக்க வேண்டாமா?

மூன்று வருடங்களாகியும் தமிழ்மக்களிடம் ஏற்பட்ட பிளவை ஒன்றுபடுத்த முடியாதவர்கள் எமது எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திப்பதில் பயனில்லை. ஒவ்வொரு கட்சியும் தமது கொள்கைகளை சர்வாதிகாரமாக நடத்த முயல்வதுதான் ஜனநாயகமா?

பெரும்பான்மையினரின் ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும்தான் சிறுபான்மை மக்கள் முன்னேற முடியும் முதலாவதாக நாம் தான் எல்லாத்துறைகளிலும் ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும். அதன்பின்னரே உரிமைகளைப் பெற படிப்படியாக முயல வேண்டும். சந்தர்ப்பம் வரும்போது நாம் அதனைப் பயன்படுத்த வேண்டும். யு. என். பி.யுடன் கூட்டுச் சேர்ந்திருந்தால் இப்போது அரசாங்கத்தையே நடத்தியிருக்கலாம்.

நடந்தனவற்றைப்பற்றி இனிச் சிந்திப்பதில் பயனில்லை இனிமேலாவது நாம் ஒன்றுபடவேண்டும். பொது விஷயங்களை பலகட்சிகளுடன் ஆலோசித்து தீர்மானிக்க வேண்டும். தமிழரின் குரலை ஒன்ருக்க வேண்டும். இல்லையேல் எமக்கு விமோசனமில்லை.

இப்போது ஒரு சோதனைக் காலம் நெருங்குகிறது. எது செய்ய வேண்டும் என்பதனை நாமே சிந்திக்க வேண்டும். அரசியல் கட்சிகளின் ஆலோசனையை இவ்விஷயத்தில் கேட்கக்கூடாது.

சிங்களம் படிப்பதனல் நஷ்டம்ஏற்படாது. சகோதர மனப்பான்மை வளரும் காலஅளவில் சிங்களச் சகோதரரும் தமிழ்படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

---

# இசையாளருக்கு பிரதிநிதித்துவம்

## பிரதேசகலாமன்றத்திடம் இசையாளர்சங்கம்கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பிரதேச கலாமன்றத்தில் இசையாளர் சமூகஸ்தாபனமான ஐக்கிய அபிவிருத்திச் சங்கத்திற்குப் பிரதிநிதித்துவம் தருமாறு கோரி பிரதேச கலாமன்றத் தலைவரும் வடமாகாண அரசாங்க அதிபருமான திரு. வி. பி. வித்தாச்சியிடம் யாழ் இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கப்பிரதிநிதிகள் மகஜர் ஒன்றினைச் சமர்ப்பித்துள்ளனர்.

அவர்களது மகஜரில் மேலும் சொல்லப்பட்டிருப்பதாவது:

நமது சமூகத்தின் தொழிலையும் கலாசாரத்தையும் விருத்திபடுத்துவதே எங்கள் சங்கத்தின் பிரதான நோக்கமாக இருந்து வருவதால் தங்கள் கலாமன்றத்தில் சங்கத்தின் இருபிரதிநிதிகளை அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்வது பொருத்தமாக அமையும் என்றே கருதுகிறோம். இந்நாட்டில் சிறந்த வித்துவான்கள் தோன்ற வேண்டும் என்பதற்காக இரவுபகல் அயராது. மெய்வருத்தம் பாராது உழைத்து வரும் நமது சமூகத்தினருக்கு இப்பிரதிநிதித்துவம் பலவகையிலும் ஆதரவு தருவதாயிருக்கும்.

சங்கீதத்துறையில் ஈடுபாடுள்ளவர்கள் வேறும்பலர் இருந்து வருகின்றனர். ஆனல் அவர்கள் இசைத் தொழிலைப் பாரம்பரியமாகக் கையாண்டு வரும் ஒரு சமூகத்தைச் சேராதவர்கள். அதனல் அவர்கள் எங்கள் பிரச்னைகளையும் எங்கள் சமூகத்துக்குள்ளதொழில் நிலைமைகளையும் அறியமாட்டார்கள்.

மேலும் நாதஸ்வரம் வாசிப்பது, தவில் வாசிப்பது என்பது கூட மற்றவர்கள் எளிதில் கற்றுக் கொண்டுவிடக் கூடியதல்ல.

ஆகவேதான் இசையாளர் சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு இசையாளர் சங்கத்தையே தாங்கள் கலந்து கொள்ள வேண்டுமென்றும், இசையாளர் சமூகத்தின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக இசையாளர் சங்கத்தையே ஒப்புக் கொள்ள வேண்டுமென்றும் நாம் கேட்டுக் கொள்கிறோம்

**மணி வாக்கு**

வேலையின்றிப் பட்டினி கிடக்கும் ஏழைகளுக்கு முன்பாக, ஜீவனத்துக்கான வேலை உணவு இந்த வரவேற்கத்தக்க உருவங்களிலேயே இறைவனும் தோன்றத் துணிவார்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு மாசி மீ 20 உ (4-3-63)


## அரிசி விலை உயர்வு

இன்று முதல் யாழ்ப்பாணத்தில் பங்கீட்டரிசியின் விலை கொத்துக்கு 4 சதம் உயர்த்தப்படுகின்றது. சென்ற வாரம்வரை 25 சதம் விற்ற அரிசி இன்றுமுதல் 29 சதம் விற்கப்படுவது சிறப்பாக இங்கு ஏழை மக்களுக்குப் புதிய பளுவாகும். இத்துடன் இங்கு மாவுவிலையிலும் ராத்தலுக்கு 1½ சதம் கூட்டப்படுகின்றது.

கொழும்பிலே பங்கீட்டு அரிசியின் விலையில் மாறுதலில்லை. அன்றும் இன்றும் 25 சதம் தான். தீவின் மற்றப்பகுதிகளில் வசிப்பவர்களைவருட அரிசியும் மாவும் இதைவிட அதிகவிலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. மற்ற இடங்களை எல்லாம்விட யாழ்ப்பாணம், அம்பாறை இவ்விடங்களிலுள்ள மக்களிடம்தான் அரிசிக்கும் மாவுக்கும் அதிக விலை வசூலிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

அரிசி, மாவு இவ்விலைகளை சிலஇடங்களில் குறைத்தும், சிலஇடங்களில் கூட்டியும், மற்ற இடங்களில் மாற்றுமலும் இருப்பதற்குக் காரணம், துறைமுக நகரமாகிய கொழும்பிலிருந்து கொண்டு செல்லுவதற்கு ஆகும் அதிகச் செலவே என்றும், யாழ்ப்பாணமும் அம்பாறையும் கொழும்புக்கு அதிக தூரத்திலுள்ளதால் அங்குள்ள மக்கள் அதிக விலை கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும், சமாதானம் கூறப்படுகின்றது.

ஒருவிதத்தில் பார்த்தால் இது நியாயமாகத் தோன்றக் கூடும். ஆனால் அரிசியும், மாவும்மக்களின் உயிர்போன்ற உணவுப் பொருள்கள். இப்பொருள்களைத் தீவிலுள்ள மக்களுக்கும் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து கோடிக்கணக்கான உதவிப் பணத்தை அரசாங்கம் வழங்கி வருகின்றது. ஆனால் கொண்டு செல்லும் செலவு அதிகமாகிறதென்ற காரணத்தால் சில பகுதியிலுள்ளவர்களுக்கு இப்பொருள்களை, கொழும்பு விலைக்கும் அதிகமாக விற்பது மக்களிடையே அரசாங்கம் வேற்றுமையும் பாரபட்சமும் காட்டுவதாகும். எக்காரணம்பற்றியும் இவ்வித வேற்றுமை நியாயமாகாது.

அதிகப்படியாகும் போக்குவரத்து செலவை அரசாங்கம் ஏற்க முடியாதென்றும் சம்பந்தப்பட்ட மக்களே செலுத்த வேண்டுமென்றும் வாதிக்கலாம். உண்மை. அப்படியாயின், தீவிலே பலஇடங்களுக்கும் அரிசி, மாவு இவற்றைக் கொண்டு செல்ல மொத்தம் எவ்வளவு செலவாகிறதோ அதைத் தீவெங்கும் அரிசிக்கு 26 அல்லது 27 சதம் என்று ஒரே விலையை நிர்ணயித்து, தீவெங்குமுள்ள பொதுமக்களிடம் வசூலிக்கலாம். இப்படிச் செய்வதால், அரசாங்கத்துக்கு அதிகப்படி நஷ்டமேற்படாததுடன், தீவின் எந்தப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கும் அரசாங்கம் உணவு விஷயத்தில் ஒரே சமமான நீதி வழங்குவதாகவுமிருக்கும்.

வடக்கு, கிழக்கு, தெற்கு இப்பகுதிகளில், துறைமுகங்களை அபிவிருத்தி செய்து, ஏற்றுமதி இறக்குமதிகளை அவற்றின் மூலமும் நடத்துவதாயின், தலைநகரிலுள்ள மக்களைப் போலவே, மற்றப்பகுதியிலுள்ளவர்களுக்கும் எல்லாச் சாமான்களும் சீரான விலைக்குக் கிடைப்பதாக இருக்கும். போக்குவரத்துச் செலவுகள் அதிகமாகா. இத்துறைமுகங்களை அபிவிருத்தி செய்து பயன்படுத்தாத குற்றம் அரசாங்கத்தையே சார்ந்தது. தான் செய்யும் இக்குற்றத்துக்காக, கொழும்புக்கு வெகு தூரத்தில் வசிக்க வேண்டி இருக்கும் மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கூட்டி அரசாங்கமே ஏற்று அவர்களைத் தண்டிப்பது விபரீதமாகும். இவ்வித வேற்றுமை நடவடிக்கையால் அரசாங்கம் தூரப்பகுதிகளில் வசிப்பவர்களுக்கு நியாயம் வழங்காததுடன் அவர்களது அதிருப்தியையும் வீணாகப் பெறுவதாக இருக்கும்.

# கம்யூனிசமும் கிராமதானமும்

— வினோபாஜி —

வீரபூம் மாவட்டம்ஜெயதேவர், சண்டிதாசர் ரவீந்திரநாதர் ஆகியோர் பிறந்தஇடம். இவர்கள் மூவருமே அவரவர் காலத்தில் தரித்திர நாராயணனுக்கு சேவைசெய்தார்கள். ஆயினும் தரித்திர நாராயணனின் பசி தீர்ந்ததாகத் தெரியவில்லை.

## இருவகை முயற்சிகள்

ரவீந்திர நாதர் நாட்டின் வறுமையைப் போக்குவதற்கு எவ்வளவோ முயன்றார். ஏழைகளுக்கு உதவுவதற்காக பல வழிகளைக் கடைப்பிடித்தார். ஒன்றும் பயன் தராததைக் கண்டு நாட்டின் மோசமான நிலையைப் பார்த்தும் ஸ்ரீ நிகேதன் என்ற கிராம சேவா ஸ்தாபனத்தை ஆரம்பித்தார். யேசுநாதர் காலந்தொட்டு ரவீந்திரநாதர் காலம்வரை ஏழைகளுக்கு உதவவேண்டும், வறுமைக்குப் பரிகாரம் காண வேண்டுமென்று சொல்லப்பட்டுவந்த போதிலும், வறுமை என்னவோ நீங்குவதாய்க் காணோம். இதற்குக் காரணம் 'நாம் செய்யவேண்டியது செல்வந்தர்களின், உள்ளத்தில் புகுந்து அவர்கள் உதவியைப் பெறுவதே' என்று கருதப்பட்டுவந்ததேயாகும். இது தனி மனிதர் உள்ளத்தை மாற்றி அதன் மூலம் மக்கள் நிலையை உயர்த்தப்பார்ப்பதாகும். இது ஓரளவு உதவியிருக்கிறது. ஆனால் இது வறுமையை முற்றிலும் போக்குவதாயில்லை. இதைக் கண்ட பொதுவுடைமைக்காரர்கள் இதனாலெல்லாம் ஒன்றும் ஆகாதென்று கிளம்பினார்கள். அவர்கள் எடுத்த நடவடிக்கை காரணமாக பொதுவுடைமைக்காரன் என்று சொன்னாலே பலருக்குப் பிடிக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் நான் பொதுவுடைமைக்காரர்களை வெறுப்பவனல்ல. அவர்களும் கருணை தூண்டுவதால்தான் காரியத்தில் இறங்குகிறார்கள் என்று நான் நம்புகிறேன். அவர்கள் சமூகத்தையே மாற்றாத வரையில் தனிமனிதரின் மனத்தை உள்ளத்தை மாற்றுவதென்பது நடவாதென்கிறார்கள். எனவே இந்த இரு முறைகளும் நம்முன் இருக்கின்றன.

## எனது புதிய வழி

இப்போது நான் இரண்டு வழிகளிலுமுள்ள நல்ல அம்சங்களைக் கொண்டு மூன்றாவதொன்றை உருவாக்கி சமுதாயம் அதை ஏற்றுக்கொள்ளுமாறு சொல்லி வருகிறேன். அதுதான் பூதான கிராமதான முறை. பூதானத்தில் தனி மனிதர்களின் மனமும் மாற்றப்படுகிறது. ஒருவரிடம் நிலமிருக்கிறது. பணமிருக்கிறதென்றால், "ஐயா, உங்கள் நிலத்தில் ஒரு பகுதியை தயவுசெய்து நிலமில்லாதவர்களுக்கு கொடுங்கள் என்று" சொல்லுகிறோம். அவர் கொடுக்கிறாரென்றால் உள்ளம் இளகிக் கொடுக்கிறார்கள். மனம்மாறிக் கொடுக்க முன் வருகிறார். இது ஒருமுறை. இதில்கருணையின் மூலம் காரியம் சாதிக்கப்படுகிறது. கௌதம புத்தர் யேசுநாதர் காலந்தொட்டு இந்த முறை அனுஷ்டானத்தில் இருந்துவருகிறது.

இத்துடன் நில்லாமல், இப்போது கிராமதானமென்ற இன்னொன்றையும் சேர்த்துக் கொள்கிறேன். பூமிதான முறைப்படி நிலமுள்ளவர்களெல்லோரும் தம் நிலத்தில் இருபதில் ஒருபகுதியை நிலமே இல்லாதவர்களுக்கும், போதிய நிலமில்லாதவர்களுக்கும் அளிக்குமல்லவா? இது ஒன்று இவ்வாறு அளித்தது போக எஞ்சியுள்ள நிலத்தை அவரவர் தம்மிடமே வைத்துக் கொள்ளலாம்; ஆனால் அதன் உடைமையை பட்டாவை கிராமசபையின் பெயருக்கு மாற்றிவிட வேண்டும். இந்த இரண்டாவது ஏற்பாடு சமுதாயம் முழுவதையும் மாற்றுவதற்காக அமைந்ததாகும். நிலத்தின் உடைமை கிராம சபையின் பெருக்கு மாற்றிவிடப் படுகையில் அதை விற்பதற்கோ பந்தக-பாரதீனம் செய்வதற்கோ இடமில்லாது போகுமாகையால், உடைமைப் பேச்சே அடிபட்டுப்போகும். எந்த மனிதன் யெரிலும் நிலமிராது. மனிதன் போன பிறகும் நிலம் பொதுவில் இருந்துவருமாகையால், மெள்ள மெள்ள ஒரு சமநிலை தானே அமைந்துவிடும்.

## பொதுவுடைமை முறையின் குறைபாடு

பொதுவுடைமைக்காரர்கள் என்ன செய்வார்கள்? கருணை, தயை என்றெல்லாம் பேசாமல், கிராமதானப் பேச்சையே எடுக்காமல், எதிர்த்தவர்களைக் கொன்றோ சட்டத்தின் உதவியினாலோ நிலம் முழுவதையும் பறிமுதல் செய்து, அரசாங்கத்தினுடையதாகச் செய்து விடுவார்கள்; இதைச் செய்ததனால் சமுதாயத்தையே மாற்றிவிட்டோம் என்று எண்ணிக் கொள்ளுவார்கள். ஆனால் இதனால் கிராமங்களில் அன்பும் நிலவாது; மக்களிடையே இணக்கமும் ஏற்படாது. இதுவரை இன்பமாயிருந்து வந்தவர்கள் இப்போது துன்புறுவார்கள்; துன்பப்பட்டவர்கள் இன்பம் அனுபவிப்பார்கள். அதாவது இதற்கு முன்பும் துன்பமும் இன்பமும் இருந்தன; இப்பொழுதும் இருந்துவரும். துன்பம் தொலைந்தது, எல்லோரும் இன்பமுற்றார்கள் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டது. ஒரு சார்பான இம்மாதிரியான நடவடிக்கைகளின் விளைவு இப்படித்தானிருக்கும்.

## திருவள்ளுவர் திருநாள்

யாழ்ப்பாணம், திங்கள்

திருவள்ளுவர் திருநாள் வருகிற திங்கட்கிழமை இலங்கையின் பல்வேறு இடங்களிலும் நடைபெறவிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் வண்ணை நாவலர் வித்தியாசாலையில் திருவள்ளுவர் திருநாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் இத்திருவள்ளுவர் திருநாள் விழாவிற்கு நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா தலைமை வகிப்பார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்கிறார்.

## புரட்சித் தலைவர் கொலை செய்யப்பட்டார்

லண்டன், மார்ச் 3

கியூபாவில் மத்திய லாம மாகாணத்தில் கியூபாவுக்கு எதிராக புரட்சி நடத்திய கோஷ்டியின் தலைவரைச் சுட்டுக் கொலை செய்ததுடன் அந்தப் புரட்சிக் கோஷ்டியும் நசுக்கப்பட்டுவிட்டதாக ஊர்ஜிதமான செய்திகள் கூறுகின்றன.

கோழைத்தனமான முறையில் இந்தக் கோஷ்டியினர் கொலைகள் நடத்தியதாகவும் இவர்களை ராணுவம் கண்டுபிடித்ததென்றும் அறிவிக்கப்படுகிறது.

## உடுவில் கி. ச. புதிய உப தலைவர்

மாவிட்டபுரம், ஞாயிறு

உடுவில் கிராமசபையின் புதிய உப-தலைவராக திரு. எஸ். முத்துலிங்கம் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

திரு. வி. தருமலிங்கம் தலைமையில் இத் தெரிவு நடைபெற்றது.

## சட்டப் பிரச்னைகளால் தாமதம்

### இந்து பல்கலைக் கழகம் நிறுவுவதில்

கொழும்பு, ஞாயிறு

இந்துப் பல்கலைக்கழகம் இதுவரையும் நிறுவப்படாதையிட்டு, அதற்கான காரணங்களைத் தெரிவிக்குமாறு கல்வி மந்திரியை, பிரதம மந்திரி கேட்டுள்ளார்.

பிரதமரின் நிருபத்திற்குப் பதிலளித்த நீதி அமைச்சர், இராமநாதன் கல்லூரியையும், பரமேஸ்வராக் கல்லூரியையும் கையேற்பதில் உள்ள சில சட்டப் பிரச்னைகளாலேயே தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

புதிய பல்கலைக்கழகத்திற்கு சிறிலங்கா இராமநாதன் பல்கலைக்கழகம் எனப்பெயரிடப்படும். எனத்தெரியவருகிறது. வித்யோத வித்தியலங்கார பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டுள்ள அடிப்படையிலேயே புதிய பல்கலைக்கழகமும் நிறுவப்படும். இப்பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம் போதிக்கப்படமாட்டாது எனவும் தெரியவருகிறது.

கொழும்பு, வெள்ளி

கிராம சேவகர்களாக மேலும் 383 பேர் பொதுச் சேவைக்கமிஷனால் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐயாறன் எழுதுவது

சீனர்களுக்கு தேசாபிமானம் மிக அதிகமாம். இதைப்பற்றிய ஒரு கதையை மலாயா பென்ஷனர் ஒருவர், யாழ்ப்பாண பெற்றோர் சங்கக் கூட்டத்தில் தெரிவித்தார்.

"மலாயாவில் பல வருடம் வேலைபார்த்த பின் ஓய்வெடுத்து, இலங்கை திரும்புமுன் ஒரு சீன நண்பரின் அன்பழைப்பின்மீது அவர் வீட்டிலே இருநாட்கள் தங்கி இருந்தேன். சீனருடன் மார்க்கெட்டுக்குச் செல்லுகையில், அவர் மனைவி, என்னை அழைத்து, மறக்காமல் 'தோடாப் பழம்' வாங்கிவருமாறு தன் கணவருக்கு ஞாபகப்படுத்தும்படி கூறினார். மார்க்கெட்டில் தோடம்பழம் பார்த்ததும், சீன நண்பரிடம் தெரிவித்தேன். அவர் அதைப் பார்த்ததும், ஒரு பழமும் வாங்காமல் வீடு திரும்பிவிட்டார்.

"வீடு திரும்பியதும் நடந்ததை அவர் மனைவியாரிடம் தெரிவித்தேன். உடன் அந்தச் சீனர் பழம் வாங்காத காரணத்தை விளக்கினார். மார்க்கெட்டிலிருந்த பழங்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து வந்தனவாம். சீனத் தாய்நாட்டிலிருந்து வந்த பழங்கள் இல்லாததால் தாம் வாங்கவில்லையென்றும், ஆஸ்திரேலிய பழங்கள் வாங்கி, அவர்களை ஆதரிக்கத் தாம் விரும்பவில்லையென்றும் கூறியதும், அவர் மனைவியும் சரி என்று ஒப்புக்கொண்டார். எங்கிருந்தாலும் தங்கள் சமூகத்தவரையும், தாய்நாட்டையுமே ஆதரிக்க வேண்டுமென்பதே அவர்களது உறுதியான கொள்கை" என்று கூறி, இங்கு தமிழ் மக்களும் அவ்வித உணர்ச்சிகொண்டு, தங்கள் கைத்தொழில்களையும் விளைபொருள்களையும் ஆதரித்தல், பல வாலிபர்களுக்கு உதவியாக இருக்கும் என்று சொன்னார்.

ஆனால் சீனர்களைப்போல் அவ்வளவு ஒற்றுமையும், சமூக அபிமானமும நம்மிடையே உண்டா? பெரும் சோதனைகள் ஏற்பட்டும்கூட, தலைவர்களிடையே எவ்வளவு மனக்கசப்பும் வேற்றுமைகளும்! பதவி வேட்டையும், சுயநலமும் தாண்டவமாடும்வரை, ஒற்றுமையும் தியாக புத்தியும் எப்படி ஏற்படமுடியும்?

* * *

யாழ்ப்பாணம், மன்னார் இப்பகுதிகளில் பூமிக்கடியிலே எண்ணெய் இருக்கிறதாம்! இந்திய ஆராய்ச்சி நிபுணர்கள் இதை அறிவித்துள்ளனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் காரைக்கால், பட்டுக்கோட்டை, அறந்தாங்கி முதல் ராமநாதபுரம்வரையிலே எண்ணெய்ச் சுரங்கம் இருப்பதாயும், அது இலங்கையின் வடபகுதியிலும் பரவி இருக்கலாமென்றும், நிபுணர் டாக்டர் கிருஷ்ணனும் ஏற்கெனவே இதைத் தெரிவித்திருப்பதாயும், சென்னைச் செய்தி கூறுகிறது.

தஞ்சாவூரில் எண்ணெய்க் கிணறு தோண்ட டில்லி அரசாங்கம் அனுமதித்துவிட்டது. இங்கு எண்ணெய் கிடைக்குமானால் நமக்கு எவ்வளவு நல்லது? எவ்வளவு பணம் மிச்சம்! வடபகுதி என்ற அரசியல் காரணத்துக்காக இதில் அரசாங்கம் கவனம் செலுத்தாது விட்டுவிடக்கூடாதென்கிறது ஓர் ஆங்கிலப் பத்திரிகை. அரசாங்கம் என்ன செய்யப்போகிறதோ பார்க்கலாம்.

* * *

நீருமாய்த் தீயுமாகி நிலனுமாய் விசும்புமாகி
ஏருடைக் கதிர்களாகி இமையவர் இறைஞ்ச நின்று
ஆய்வதற்கரியராகி அங்கங்கே ஆடுகின்ற
தேவர்க்குத் தேவராவார் திருப்புகலூரனாரே.

—திருநாவுக்கரசர்

வடபகுதி அசைஸ் விசாரணை

# "ஒருவர் தலையில் அடிக்கமற்றவர் குத்தினர்"

## உரும்பராய் கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், திங்கள் வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் உரும்பிராய் கொலைவழக்கு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

உரும்பிராயைச் சேர்ந்த சின்னட்டியன் நாகமுத்துவை, 15-9-61ல் பொன்னன் செல்லத்துரை, பொன்னன் நாகமுத்து, பொன்னன் சின்னத்துரை, பொன்னன் நடேசு என்பவர்கள் கத்தியால் குத்தியும், பொல்லால் தாக்கியும் கொலைசெய்ததாக இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

முடிக்குரியதரப்பில் திரு. வேக்லிபோல் வழக்கை நடத்தினர். 1-ம், 3-ம் எதிரிகள் சார்பில் திரு. மு. பாலசுந்தரமும், 2-ம், 4-ம் எதிரிகள் சார்பில் திரு. அ. அமிர்தலிங்கமும், திரு. எஸ். நடராஜாவின் அனுசரணையுடன் ஆஜராளுர்கள். திரு.கே. சோமாஸ்கந்தர் எதிரிகளுக்காக அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்தார்.

டாக்டர் எஸ். வேலும்மயிலும் சாட்சியமளித்தபின் இறந்தவரின் மனைவி பூதி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

சம்பவம் நடைபெற்றதினம் மாலை ஆறரை மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தேன். அந்தநேரம் எனது கணவன் காளிகோவிலிலிருந்து வறுத்த கடலையும், பொங்கல் மோதகமும் கொண்டுவந்தார். அவர் கொண்டுவந்த கடலையை நானும் கணவரும் கொறித்துக்கொண்டிருந்தோம் கணவன் திண்ணையில் இருந்தார். நான் கீழே முற்றத்தில் இருந்து கதைத்துக் கொண்டிருந்தோம். அந்தநேரம் திண்ணையில் கைவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. எமது மகன் நடேசுவும் கடலையை எடுத்துக்கொறித்தார். அச்சமயம் முதலாம் எதிரி செல்லத்துரை 'உனக்கும் நாட்டாண்மை வைத்துவிட்டதா?' என்று சொல்லிக்கொண்டு வந்தார். அதனைத் தொடர்ந்து சின்னத்துரை, நடேசு, நாகமுத்துவும்வந்தனர். நாகமுத்துவின் கையில் பொல்லு இருந்தது. நாகமுத்து பொல்லினால் தலையில் அடித்தார். செல்லத்துரை கத்தியினால் கழுத்துககருகில் குத்தினர். குத்தும்போது நடேசுவும், சின்னத்துரையும் இறந்த எனது கணவனைப் பிடித்துக்கொண்டு நின்றனர். நான் நாகமுத்துவிடம் இருந்த பொல்லைப் பறித்தேன். அப்போது நான் கீழேவிழுந்துவிட்டேன். அதன் பின் எல்லோரும் வெளியில் ஓடினர்கள். நான் எனது நெஞ்சில் அடித்து செல்லத்துரை குத்திவிட்டு ஓடுவதாகக் கத்தினேன். அச்சமயத்தில் வளவுக்குள் வேறுஒருவருமில்லை.

குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது பொன்னன் தனக்கு மச்சான்முறை என்றும், அன்று மச்சானைக் காணவில்லை என்றும் கூறினர். "நான் சத்தமிட்டபின்னர் பலரும் அங்கு வந்திருந்தார்கள். அதனல் யார்யார் வந்திருந்தனர் என்பதனை நான் கவனிக்கவில்லை. நான் தொடர்ந்து அழுதுகொண்டிருந்தேன்" என்று அவர் கூறினர்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. வேக்லிபோல் சாட்சியை மீண்டும் கேட்டபோது, காளிகோவிலிற்படைத்த பொங்கல் மோதகமே தனது கணவன் கொண்டுவந்து சாப்பிட்டார் என்று கூறினர்.

நீதியரசர் கேட்டதற்கு அக்கோவிலுக்கு தனது கணவனே விளக்குவைத்து வந்தார் எனவும் வெள்ளிக்கிழமைகளில் தான் விளக்கு வைப்பதென்றும் சாட்சி சொன்னர்.

ஜூரிமாரின் தலைவர் கேட்டதற்கு சாட்சி, தான் ஒழுங்காகக் கோவிலுக்குப் போவதில்லை என்றும் எப்போதாவது தினத்திற்குப் போவதுண்டென்றும் கூறினர்.

இறந்தவரின் மருமகன் கணபதி கிட்டினன் சாட்சியமளிக்கையில் தனக்கு 37 வயதென்றும், சுன்னுகம் மின்சார மத்திய நிலையத்தில் கூலி என்றும் மாமனர் இறப்பதற்கு 15 வருஷங்களுக்குமுன் தான் விவாகச்செய்தார் என்றும் சொன்னர். மேலும் அவர் கூறியதாவது:

### கல்வீடுகட்டி பணச்சடங்கு

நான் 1960-ம் ஆண்டில் ஒரு கல்வீடு கட்டியிருந்தேன். அப்பகுதியில் எனது வீடுஒன்றுதான் கல்லினல் கட்டப்பட்டதாக இருந்தது. சம்பவம் நடைபெற்ற காலத்திற்கு இரு தினங்களுக்கு முன்பாக 13-ம் திகதி தொடக்கம் நான்கு நாட்களுக்கு பணச்சடங்கு வைத்தேன். இப்பணச் சடங்கிற்கு முன்னும் அக்காலத்திலும் வீட்டிற்கு கல் அரியப்பட்டது. சம்பவம் நிகழ்ந்ததினம் இணுவிலுக்கு காலை ஆறரை மணிக்கு ஒரு பணச்சடங்கிற்குப் போயிருந்தேன். அன்று மாலை ஆறரை மணியளவில் தான் சைக்கிளில் வந்துசேர்ந்தேன். வந்து 10 நிமிஷங்களின்பின் ஆசையன் வீட்டுப் பக்கத்திலிருந்து சத்தம் கேட்டது. அரைமணித்தியாலம் வரை அச்சத்தம் கேட்டது. நான் இணுவிலால் வந்து 40 நிமிஷத்திற்குபின்பே எனது மாமனர் வீட்டிலிருந்து அழுகைக்குரல் கேட்டது. நான் மாமனர்வீட்டுப் பக்கமாக ஓடியபோது அவரின் வளவுக்குள் இருந்து 4, 5 பேர் ஓடிவந்ததைக் கண்டேன். 'உன்னைத்தான் பார்த்தோம்' என்று செல்லத்துரை புல்லுச் சத்தகத்தால் எனது கால்தொடையில் முதல் வெட்டினர். பின்பு எனது நாடியிலும் ஒருவெட்டு விழ நான் திரும்பி ஓடினேன். ஓடும்போது முதுகிலும் ஒரு வெட்டு விழுந்தது. அது யார் வெட்டியது என்பது எனக்குத் தெரியாது. இம் மூன்று காயங்களையும்விட, முதுகிலே இரு காயங்கள் இருந்ததை அறிவேன். யார் வெட்டியது, எப்போது வெட்டியது என்பது தெரியாது. எனக்கும் எதிரிகளுக்கும் ஒருவித மனத் தாங்கலும் இல்லை. பணச்சடங்குக்கும் செல்லத்துரையும் நாகமுத்துவும் வந்திருந்தனர்.

### பணச் சடங்குக்கு வரவில்லை

ஆசையன் எனது இனத்தவரே. எதிரிகளுக்கும் இனத்தவர். ஆசையனின் தந்தையும் தாயும் பணச்சடங்கிற்கு வந்திருந்தனர். ஆசையனுக்கு நான் நேரில் சொல்லியும் ஆசையன் வரவில்லை. எனக்கும் ஆசையனுக்கும் ஒருவிதமான கோபமுமில்லை. என்னில் அவருக்கு ஏதாவது மனத்தாங்கல் இருக்குமோ என்று நான் சந்தேகிக்கவில்லை.

திரு. மு. பாலசுந்தரம் குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:-

காளிகோவிலும் வைரவ கோவிலும் எனது வளவுக்குள்ளேயே இருக்கின்றன. எனது வளவும் சுப்பனின் வளவும் எனது மாமன் வளவும் அடுத்தடுத்து ஒரே நிரையில் உள்ளன. கோவிலடியிலாயினும் சரி, மாமனர் வளவிலாயினும் சரி, அல்லது சுப்பனின் வளவிலாயினும் சரி ஏதாவது கலகம் நடந்தால், அல்லது சத்தம் கேட்டால் எனது வீட்டிற்குத் தெளிவாகக் கேட்கும். எனது வளவிற்குள் செல்லி என்ற எனது சிறிய தாயும், அவருடைய 18 வயதுடைய மகன் பொன்னுத்துரையும் இருந்தனர். பொன்னி என்ற மற்றொரு சிறியதாயும், பொன்னனும் அவர் மனைவி இலட்சுமியும், அவர்களுடைய இரு பிள்ளைகளும் எனது வளவுக்குள்ளேயே இருக்கிறர்கள். சேனுதி என் வளவிற்குள் இருப்பதில்லை. அவர் அரசாங்க குடியேற்றக் காணியில் இருக்கிறர்.

### படையல் வைப்பது இல்லை

'பணச் சடங்கிற்கு இனத்தவர்களும், நண்பர்கள் பலரும் பணமும்,உபகாரமும் கொண்டு வந்து கொடுத்தனர். எமது சுற்றுடலில் வசிப்பவர்கள் எமது சமூகத்தைச் சேர்ந்தவர்களே. கோவிலுக்குப் பூஜை செய்துவந்தது எனது மாமனர். வெள்ளிக்கிழமைகளில் மட்டும் கற்பூரம் கொளுத்துவார். வேறு விசேஷமாக பூஜைக்குரிய ஒன்றும் செய்வதில்லை. பிரசாதம் வைப்பதும் கிடையாது. வைகாசி மாசத்தில்மட்டும் எல்லோரும் சேர்ந்து பொங்குவார்கள். அப்போதுதான் படையல் வைப்பதுண்டு. சம்பவம் நிகழ்ந்த புரட்டாதி மாத காலத்தில் ஒருவிதமான படையலும் வைப்பது கிடையாது. சம்பவம் நடைபெற்ற தினம் பிரசாதம் ஒன்றும் படைக்கவில்லை.

எனது வீட்டிற்குக் கல்லெறிந்ததனல் ஓடுகள் உடைந்தும் ஒருவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கல்லெறியைக் கவனிப்பதற்காக காவல் ஒன்றும் வைக்கவில்லை. பணச்சடங்கு காலத்தில் எனது மாமனும், மாமியும் அநேகமாக அங்கு நின்றுவிட்டு வீட்டிற்குப் போவார்கள்.

### குரலிலிருந்து அறிந்தேன்

கோவிலடியில் ஓர் கலம்பகம் நடந்திருக்கவுமில்லை. ஆசையனுக்கு எப்போது காயம் ஏற்பட்டது என்பதும் தெரியாது. மாமன் வீட்டில் 'ஐயோ, ஐயோ' என்று குரல் கேட்டதும் சுப்பனின் வளவுக்குள்ளாக ஓடி ஒழுங்கையால் போனேன். சுப்பனின் வளவுக்குள்ளால் மாமனின் வளவுள் போக வழியுண்டு. ஆனல் நான் ஒழுங்கைககுள்ளாகவே போனேன். இரவாக இருந்தமையால் என் எதிரில் வந்தவர்களை அடையாளம் காணமுடியவில்லை. முதலாம் எதிரியின் குரலிலிருந்தே செல்லத்துரைதான் என்னை வெட்டியதாகச் சொல்ல முடியும். செல்லத்துரைக்கும் எனக்கும் எவ்விதமான மனத்தாங்கலும் இல்லாதிருக்க அவர் என்னைத் தாக்கியது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

என்னை வெட்டியதும் சுப்பனின் வளவுக்குள் ஓடினேன். அப்போது சுப்பனின் மனைவி சின்னப்பெட்டை விளக்குடன் நின்றுர். நடந்ததை நான் அவருச்கும் சொன்னேன். அதன்பின் அறிவற்ற நிலையில் விழ்ந்துவிட்டேன். ஆஸ்பத்திரியில் தான் எனக்கு அறிவு வந்தது. யார் வெட்டியது என்பதை சின்னப்பெட்டைக்குச் சொல்லவில்லை. நான் படுத்திருந்த கட்டிலுக்குப் பக்கத்தில் ஆசையனும் ஆஸ்பத்திரியில் படுத்திருந்தார். ஒரு வாரத்தில் நான் வீட்டுக்குப் போனேன். நான் ஆஸ்பத்திரியைவிட்டுப்போகும் போது ஆசையன் அங்குதான் இருந்தார். நான் ஆஸ்பத்திரியில் இருக்கும்போது ஆசையனுடன் கதைக்கவுமில்லை, ஆசையனுக்கு எவ்விதம் காயம் ஏற்பட்டது என்பதனைக் கேட்கவும் விரும்பவில்லை. எனக்கும் ஆசையனுக்கும் எவ்வித கோபமுமில்லை. ஆசையனும் இதைப் பற்றி என்னிடம் கேட்கவில்லை. எதிரிகளுக்கு ஒரு நேரமாவது நான் அடித்ததில்லை. அவர்களுக்கு யாராவது அடித்ததையும் காணவில்லை.

மேல்விசாரணையை நீதியரசர் இன்று காலைவரை ஒத்திவைத்தார்.

# கிணற்றுள் விழுந்து மனைவி மாண்டார்

## இறுதிச் சடங்கன்று கணவனும் பலி

மாவிட்டபுரம், ஞாயிறு கிணற்றுள் விழுந்து இறந்த மனைவியின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது கணவனும் கிணற்றுக்குள் விழுந்து இறந்ததாகக் கூறப்படும் சம்பவம் சங்கானைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த கட்டுடையில் நிகழ்ந்துள்ளது. வியாழக்கிழமை மனைவியும் வெள்ளிக்கிழமை கணவனும் மாண்டனர். இவர்களுக்கு ஒரு பெண்பிள்ளையும் மூன்று ஆண் குழந்தைகளும் உண்டு.

கட்டுடையைச்சேர்ந்த கணபதி கதிரவேலு (வயது 30), கதிரவேலு பாக்கியம் (வயது 24) ஆகிய இருவரினதும் மரணம் குறித்து மல்லாமம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் ஸ்தலத்தில் மரணவிசாரணை நடத்தினர்.

காலஞ்சென்றவர்களின் மூத்த மகளான புஷ்பராணி (வயது 10) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இறந்தவர்கள் எனது தாயும் தந்தையும். 28-ம் திகதிகாலை ஆறுமணியளவில் எனது தந்தை வேலைக்குச்சென்றுவிட்டார். அவர் திரும்பி மாலை 6-00 மணிக்குத்தான் வந்தார். அன்று மாலை 5-00 மணியளவில் அம்மா வயல்பக்கமாக உள்ள பாதுகாப்பு இல்லாத கிணற்றுக்குக் குளிக்க இரண்டு வாளியுடன் சென்றுர். சிறிது நேரத்தில் நான் சவர்க்காரத்துடன் கிணற்றடிக்குச் சென்றேன். அங்கு அம்மாவைக் காணவில்லை. ஒரு வாளிமாத்திரம் கிணற்றடியில் இருந்தது. கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தேன் அம்மாவைக்காணவில்லை. நான் ஓடிப்போய் செல்லனிடம் கூறினேன். செல்லனும் மற்றவர்களும் வந்து அம்மாவைத் தூக்கினர்கள். அவர் இறந்துவிட்டார். இன்று (1-3-63) அம்மாவின் செத்த வீட்டுக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தது. நண்பகல் ஐயா குழறிக்கொண்டு பக்கத்தில் உள்ள பாதுகாப்பான கிணற்றுப் பக்கமாக ஓடினர். அங்கு அவர் கிணற்றுக்குள் விழுந்துவிட்டார் என்று மற்றவர்கள் கூறினர்கள். பின்பு அவரைப் பிரேதமாகத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். இந்த வீடு அம்மாவுக்கும் ஐயாவுக்கும்தான் சொந்தம். அம்மாவும் ஐயாவும் சந்தோஷமாகத்தான் இருந்தார்கள். எனக்கு மூன்று தம்பிமார்கள் உண்டு.

வயிரவன் செல்லன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

28-ம் திகதி மாலை 5-00 மணியளவில் புஷ்பராணி வந்து தாய் கிணற்றுக்குள் கிடப்பதாகக் கூறினர். நான் இவர்களின் வீட்டுக்குச் சமீபத்தில் வசிக்கிறேன். அவர்களுக்கு நான் நெருங்கிய சொந்தக்காரன். நான் குழறிக்கொண்டு கிணற்றடிக்கு ஓடினேன். வேறும் பலர் வந்தார்கள் பாக்கியத்தைக் கிணற்றுக்குள் இருந்து தூக்கினேம். அவருக்கு உயிர் இருந்தது. நாங்கள் அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக ஆயத்தங்கள் செய்தோம். ஆனல் அதற்கிடையில் அவர் இறந்துவிட்டார். அவர் இறக்கும்போது கணவன் இல்லை. பின்னர் தான் வந்தார். கதிரவேலு மனைவியின் மரணத்தால் அதிர்ச்சி அடைந்து இருந்தார். அடுத்தநாள் (1-3-63) பாக்கியத்தின் செத்தவீட்டுக்கு ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தது. சொந்தக்காரர்கள் அதிகமாகவந்து இருந்தார்கள். கதிரவேலுவும் இந்தக் கூட்டத்தில் இருந்தார். நண்பகல் 12 மணியளவில் கதிரவேலு கூட்டத்திற்குள் இருந்து திடீரெனக் குழறிக்கொண்டு கிணற்றுப்பக்கமாக ஓடினர். சொந்தக்காரர் பின்னல் ஓடினர்கள். நானும் ஓடினேன். முன்னல் சென்றவர்கள் கதிரவேலு கிணற்றில் விழுந்துவிட்டதாக கூறினர்கள். நான்கிணற்றிறுள் எட்டிப்பார்த்தேன் கதிரவேலுவைத்தெரியவில்லை. இருவர் அவரைத் தூக்கமுயன்றுர்கள். ஆனல் கிணறு ஆழமாக இருந்தமையால் உடன்தூக்க முடியவில்லை. பிறகு பிரேதமாகத்தான் தூக்கினேம். கணவனும் மனைவியும் சந்தோஷமாகத்தான் வாழ்க்கை நடத்தினர்கள். பாக்கியம் இறந்ததைப்பற்றி பொலிஸில் முன்னர் முறைப்பாடுகொடுக்கவில்லை. கதிரவேலு இறந்த பின்தான் இருவரினதும் மரணம்பற்றி அறிவித்தோம்.

நீதிபதி மேல்விசாரணையை 11-ம் திகதிக்கு ஒத்திவைத்து காங்கேசன்துறை டி. எம். ஓ. பிரேத பரிசோதனை நடத்த உத்தரவிட்டார்.

---

## 'அடிப்படைக் கருத்துக்களை அறியவேண்டும்'

கைதடி, ஞாயிறு

கைதடி கிழக்கு, இந்து வாலிபர் சங்கத்தின் நான்காவது சிவராத்திரி விழா கைதடி ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் கோவிலில் நடைபெற்றது. தலைமை வகித்த முன்னுள் கிராமசபைத் தலைவர் திரு. நா. பொன்னம்பலம் விழாவில் பேசுகையில் 'பல்வேறு துறைகளும் முன்னேறி வரும் இக் காலத்தில பொதுவாக சமய உணர்வு அருகிவருகின்றது என்றும் மூடக் கொள்கைகளை அகற்றி சமயத்தின் அடிப்படையான உண்மைக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக்காட்ட இத்தகைய இந்து வாலிபர் சங்கங்கள் ஒவ்வொரு மூலை முடக்குகளிலும் தோன்றி நல்வழிப்படுத்தவேண்டும் என் கூறினர்.

வித்துவான் மு. சபாரத்தினம். பண்டிதர் த. சுவாமிநாதன், திரு ஆ. பொன்னையா, திரு. க. திருலோகசிங்கம் ஆகியோரின் உபந்நியாசங்களும், ஆசிரியர் திரு. சி. சரவணமுத்துவின் "வள்ளி திருமணம்" என்னும் பொருள்பற்றிய சிறந்த கதாப்பிரசங்கமும் திரு. சி. விஜயரத்தினத்தின் இன்னிசை விருந்தும் செல்வி பூமணி சின்னத்துரையின் திருவாசக ஓதலும் இடம்பெற்றன.

---

## துப்பாக்கிச் சூட்டுக்கு குழந்தைபலி!

அகலவத்தை, ஞாயிறு

அகலவத்தையிலுள்ள ஒரு சேனையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைத் தொடர்ந்து 4 வயதுள்ள குழந்தையொன்று துப்பாக்கிச்சூட்டுக்கு இரையானது இதுசம்பந்தமாக ஜோன் என்ற தோட்டத் தொழிலாளி காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

சரசாலை இரட்டைக் கொலைவழக்கு

# “எந்தக் கணபதிப்பிள்ளை சுட்டதென்று தெரியாது”

## ஜி. ஜி. குறுக்கு விசாரணைக்கு சாட்சி பதில்

சாவகச்சேரி, சனி

சரசாலை இரட்டைக் கொலை வழக்கு விசாரணை நேற்று நண்பகல் இடைவேளைக்குப் பின் சாவகச்சேரி நீதிபதி திரு. ஏ. வைத்தியலிங்கம்முன்னிலையில் தொடர்ந்து நடைபெற்றது. அப்பொழுது திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், சாட்சியாகிய நாகரை குறுக்கு விசாரணை செய்தார். சரசாலையில் 5 ‘கணபதிப்பிள்ளைகள் இருப்பதாகவும், சரவணையின் மருமகன் தவமணியின் தகப்பனுக்கும், கணபதிப்பிள்ளை தான் பெயரென்றும், எந்தக் கணபதிப்பிள்ளை சுட்டதென்று தனக்குத் தெரியாதென்றும் அவர் கூறினார்.

எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், முதலியார் உதவியின்றி, நாகரை, நேரடியாக தமிழில் குறுக்குவிசாரணை செய்தபோது கோர்ட்டில் திரண்டிருந்த ஜனத்திரள் மிகவும் கவனமாகவும், அமைதியாகவும் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஜி. ஜி: சம்பவம் நடந்த அன்று நீர் எங்கேயிருந்தீர்?

சாட்சி: மனைவியுடன் வீட்டிலிருந்தேன்.

ஜி. ஜி: பொலிசுக்கு போகும்படி யார் சொன்னார்கள்?

சாட்சி: தெய்வானைப்பிள்ளை சொன்னார்.

ஜி. ஜி: என்ன சொன்னார்?

சாட்சி: ‘கணபதிப்பிள்ளை சுட்டுப்போட்டார் பொலிசுக்கு போ’ என்று சொன்னார்.

ஜி. ஜி: சின்னத்தம்பியை யார் சுட்டதென்று உடனே தெரியாது?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: பொலிசுக்கு என்ன சொல்லப் போனீர்?

சாட்சி: (மௌனம்)

ஜி. ஜி: இரண்டு பேருக்கும் உயிர் இருந்ததோ தெரியாது? சின்னத்தம்பியை சுட்டது யார் என்று தெரியாது? எந்தக் கணபதிப்பிள்ளை சுட்டதென்று தெரியாது? அப்போ என்ன சொல்ல போனீர்?

சாட்சி: கணபதிப்பிள்ளையென்றதும் முதல் எதிரியை நினைத்தேன்.

ஜி. ஜி: ஏன் நினைத்தீர்? வெள்ளாம் சாதி பெண் எடுத்த வழக்கில் முதல் எதிரி தான் முழுமூச்சாய் நின்றார்!

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: ஆனபடியால் தான் இந்தக் கணபதிப்பிள்ளையென்று நினைத்தீர்.

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: ஏன் பொன்னையாவிடம் போனீர்?

சாட்சி: உதவிக்காக.

ஜி. ஜி: உங்களுக்குள் வழக்கு விஷயத்தில் அனுபவமுள்ளவரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் முதல் வாக்குமூலம் கொடுத்தபோது கணபதிப்பிள்ளை, சுப்பிரமணியம் பற்றி ஒன்றும் சொல்லவில்லை?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: மறுநாள் மத்தியானம்வரை யார் யாரைச் சுட்டதென்று தெரியாது?

சாட்சி: தெரியாது.

ஜி. ஜி: ரோட்டால் போகும்போது ஆறுமுகம் பொன்னையாவை துவக்குடன் கண்டீர்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: ஏதாவது கேட்டீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: எவ்வளவு தூரத்திட்ட போனீர்?

சாட்சி: தொடக்கூடிய தூரம்.

ஜி. ஜி: உம்முடன் பொன்னையாவுக்கு கோபமா?

சாட்சி: பெண் எடுத்த கோபம்!

ஜி. ஜி: நீர் பெண் எடுக்கவில்லையே (சிரிப்பு) பயப்படுத்தவில்லையா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: துவக்கைக் கண்டபோது வெடிச்சத்தத்தை துவக்குடன் தொடர்புபடுத்தினீரா?

சாட்சி: (மௌனம்)

ஜி. ஜி: நீர் அவரை தாண்டிப்போனதும் அவர் என்ன செய்தார்?

சாட்சி: எனக்கு இலக்கு அனைத்தார்!

ஜி. ஜி: உமக்குப் பிடரியிலும் கண்ணிருக்கா? (சிரிப்பு).

சாட்சி: நான் திரும்பிப் பார்த்துக்கொண்டு போனேன்.

ஜி. ஜி. சுடும்போது என்ன செய்தீர்?

சாட்சி: முன்பக்கம் திரும்பிவிட்டேன்!

ஜி. ஜி: அப்ப அவர்தான் சுட்டிருப்பார் என எண்ணினீர்!

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: சுடுபட்டு விழும்போது பொன்னையா சுட்டதாக குளறவில்லை.

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: சுட்டது யார் என்று நிலவு வெளிச்சத்தில் கண்டீர்!

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: பொலிஸ வாக்குமூலத்தில், இன்னொருவர் ‘டோர்ச் லைட்’ அடித்தபோது 3-ம் எதிரியை மட்டுப்பிடித்ததாக கூறியிருக்கிறீர்?

சாட்சி: இல்லை. அப்படிக் கூறவில்லை.

ஜி. ஜி: பொன்னையா வந்தது தெரியுமா?

சாட்சி: பொன்னையா வந்தது கனவிலும் தெரியாது.

சின்னத்தம்பி கைம்பெண் நாகம்மாவும், நாகர் பெண் சின்னப்பிள்ளையும் சாட்சியமளித்தார்கள்.

இம்மாதம் 7-ம், 8-ம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

# கல்வி இலாகா— முனிசிபல் கோஷ்டி தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்க ஆதரவில் நடைபெற்றுவந்த கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இறுதி ஆட்டம் இம்மாதம் நடுப்பகுதியில் நடைபெறவிருக்கின்றது.

“ஏ” பிரிவில் கல்வி இலாகா சாம்பியனாகவும், ‘பி’ பிரிவில் முனிசிபல் சபை சாம்பியனாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இரு கோஷ்டிகளுக்குமிடையேயான சாம்பியன் போட்டி விரைவில் நிகழவிருக்கின்றது.

சாம்பியன் போட்டியில் வெற்றிபெறும் கோஷ்டிக்கு வெற்றிக்கிண்ணம் பரிசாக வழங்கப்படவிருக்கிறது.

சாம்பியன்போட்டி பொலிஸ் மைதானத்தில் நடைபெறும்.

இச்சங்கம் நடத்தும் “நொக்கவுட்” உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியும் இம்மாதத்திலே நடைபெறும்.

# டி. டி. கே. வெளிநாடு செல்கிறார்

புதுடில்லி, மார்ச். 3

மத்திய அரசாங்க மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி இம்மாத இறுதியில் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் விஜயம் செய்யவிருக்கிறார். அமெரிக்க, பிரிட்டிஷ் மந்திரிகள் சமீபத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்ததற்குப் பதிலாக திரு. டி. டி. கே. செல்லவிருக்கிறார்.

# முன்பு சொன்னது மெய் இன்று சொல்வது பொய்யா?

## சாட்சியிடம் ஜி. ஜி. கேள்வி

### சரசாலை வழக்கு விசாரணை

சரசாலை இரட்டைக்கொலை வழக்கு விசாரணை வெள்ளிக்கிழமை காலை சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு ஏ. வைத்தியலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது. அன்றைய விசாரணைச் செய்தி சனிக்கிழமை ‘ஈழநாடு’ இதழில் சில பதிப்புகளில் சிறு தவறு காரணமாக வெளிவரவில்லை. அன்றைய விசாரணை விபரம் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

1963-ம் ஆண்டு தைமாதம் 14-ந் திகதி இரவு சரசாலையைச் சேர்ந்த சரவணையையும் சின்னத்தம்பியையும் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக முத்தையா கணபதிப்பிள்ளை, பொன்னையா சுப்பிரமணியம், சின்னையா சுப்பிரமணியம், ஆறுமுகம் பொன்னையா ஆகியோர் இவ்வழக்கில்குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

எதிரிகள் சார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. சுந்தரலிங்கம், திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆகியோர் உதவியுடனும் திருவாளர்கள்: எஸ். கே. திரவியநாயகம், ஆர். டி. சிவகுரு, வி. கனகசபை, செல்லத்தம்பி ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

செல்லையா பொன்னையா சாட்சியத்தின்போது கூறியதாவது:

“காலஞ்சென்ற சரவணை என் சொந்தக்காரர். சம்பவம் நடந்தன்று நான் 9 மணிக்குப் படுக்கைக்குப் போனேன். என் வீட்டுக்கு வடக்குப்பக்கமாக 2 மணிக்கு வெடிச்சத்தம் கேட்டது. இரண்டு மூன்று வெடி அடுத்தடுத்து கேட்டதைத் தொடர்ந்து ஒரு பெண் குளறியது கேட்டது. நான் வெளியே ரோட்டுக்கு வந்தேன். நல்ல நிலவு. ஆறுமுகம் பொன்னையாவின் வீட்டுப் பக்கத்தால் வந்தேன்.

### ஆறுதலாக நடந்தேன்

அப்பொழுது பொன்னையா வீட்டில் யாரோ கதைத்துக் கேட்டது. நான் ரோட்டில் ஆறுதலாக நடந்து வந்தேன். பத்துயார் போனதும் ரோட்டில் ஒருவெடிச்சத்தம் கேட்டது. நான் பயந்து பத்து நிமிடம் வேலியோடு நின்றேன். அதன்பின் குளறிய சத்தம் வந்த வீட்டை நோக்கிப் போனேன். சரவணை வீட்டில் படலை அரைவாசி மட்டும் சாத்தப்படாமல் இருந்தது. அதனால் உள்ளே போகக் கூடியதாயிருந்தது.

### இரத்தத்துடன் கிடந்தார்

சின்னத்தம்பி ரத்தத்துடன் படலைக்குள்ளே நிமிர்ந்தபடி கிடந்தார். சின்னத்தம்பியின் மனைவி சுப்பிரமணியம் தன் புருஷனை சுட்டுப்போட்டதாக குளறியபடி இருந்தார். சிறிது தூரத்தில் சரவணையின் உடல் நிலத்தில் கிடந்தது. நான் நாகம்மாவை ஒன்றும் கேட்கவில்லை. சின்னத்தம்பியைக் குனிந்து பார்த்தபோது மூச்சுப்பேச்சு இல்லை. சரவணைக்குப் பக்கத்தில் மனைவியும் மகளும் குளறிக் கொண்டிருந்தார்கள்.

### பொலிசுக்கு போகச் சொன்னார்

சரவணையின் மனைவி என்னை பொலிசுக்குப் போகச் சொன்னார். தன் புருஷனை முத்தையா கணபதிப்பிள்ளையும், சின்னத்தம்பியை சுப்பிரமணியமும் சுட்டுப் போட்டதாக தெய்வானை சொன்னார். தம்பர் நாகரையும் சுட்டுப் போட்டினம் அவரையும் பொலிசுக்கு கூட்டிப் போகும்படி சொன்னார். நாகரை யார் சுட்டதென்று சொல்லவில்லை. நான் கேட்கவுமில்லை. நான் தம்பர் நாகர் வீட்டுக்குப் போனேன். சரவணை வீட்டில் 15 நிமிடம் இருந்தேன். நாகர் அறிவில்லாத நிலையில் படுத்திருந்தார். நான் அவருக்கு தண்ணீர் கொடுத்தேன்.

### மீண்டும் 3 வெடி

அப்பொழுது மீண்டும் 3 வெடிச் சத்தம் கேட்டது. தன் புருஷனை ஆறுமுகம் பொன்னையா சுட்டுவிட்டதாகவும் பொலிசுக்கு கொண்டு போகும்படியும் சின்னப்பிள்ளை கூறினார். வெடிச்சத்தம் கேட்டபடியால் விடியும்வரை அங்கே தங்கினேன். மறுநாள் காலை 6 மணிக்கு பொலிசுக்குச் சென்று விபரம் தெரிவித்தேன்.

பொன்னையாவை எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் குறுக்கு விசாரணைசெய்தார்.

ஜி. ஜி: தெய்வானை குளறியதிலிருந்து இரண்டு எதிரிகளையும் மட்டுக்கட்டினீரா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: தெய்வானையிடம் என்ன கேட்டார்?

சாட்சி: யார் சுட்டதென்று?

ஜி. ஜி: கணபதிப்பிள்ளையை சரவணையை சுட்டுப் போட்டதாகவும், சின்னத்தம்பியை சுப்பிரமணியம் சுட்டுப்போட்டதாகவும் குளறியிருந்தால் நீர் ஏன் கேட்டீர் யார் சுட்டதென்று?

சாட்சி: (மௌனம்)

ஜி. ஜி: நீர்தான் முதலில் பொலிசுக்கு அறிவித்தீரா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: முதல் வாக்குமூலத்தில் சுட்டவர்கள் பெயர் சொல்லி தெய்வானை கத்தியது உமக்குக் கேட்டதாகச் சொன்னீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: ஐயோ சுட்டு போட்டாங்கள் என்ற சத்தம் கேட்டதாக பொலிசுக்குச் சொன்னீரா?

சாட்சி: ஆம்

ஜி. ஜி: அப்போ கணபதிப்பிள்ளை என் புருஷனைச் சுட்டுப் போட்டார் என்று தெய்வானை கத்திய சத்தம் ஏன் கேட்கவில்லை?

சாட்சி: இது பிறகு நடந்தது.

ஜி. ஜி: பிறகோ முந்தியோ ஏன சொல்லவில்லை?

சாட்சி: (மௌனம்)

ஜி. ஜி: சின்னப் படலையால் போகும்போது சின்னத்தம்பியின் உடலைக் கடந்தா போனீர்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி. சின்னத்தம்பியின் பக்கத்தில் குளறிக்கொண்டிருந்த நாகம்மாவுடன் ஏன் கதைக்கவில்லை.

சாட்சி: நான் அவவுடன் கதைப்பதில்லை. கோபம்!

ஜி. ஜி: சின்னத்தம்பியுடனும் கோபமா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: உங்களின் ஆட்கள் ஒப்பாரிவைக்கிறதா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: நாகம்மா ஒப்பாரி வைக்கவில்லையா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: தெய்வானை குளறினாரா?

சாட்சி: நான் போனதும் குளறவில்லை!

ஜி. ஜி: அன்றிரவே கண்ட சாட்சிகள் யார் என்று தெரியுமா?

சாட்சி: தெரியும்.

ஜி. ஜி: தேவராசா சாட்சி என்று எப்படி தெரியும்?

சாட்சி: பொலிஸ் வாக்கு மூலம் எடுத்தபோது தெரியும்.

ஜி. ஜி: அன்றிரவு தெய்வானை வீட்டில் தெரியாதா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி. பொலிசாரிடம் தேவராசாவைப்பற்றி ஒரு வார்த்தை கூறினீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி. சரவணை வீட்டிற்குப் போகும்போது வேறு பெண்கள் இருந்தார்களா?

சாட்சி: தேவராசா இருந்தார்

ஜி. ஜி: தேவராசா பெண்ணா? (சிரிப்பு) வேறு பெண்கள்?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: வேறு பெண்கள் இருந்ததாக நீர் சொல்லி பொலிசார் பதிந்திருந்தால் அது பொய்.!

சாட்சி: அப்படி பதியப்பட்டிருந்தால் பொய்!

ஜி. ஜி: தேவராசாவைப் பற்றி பொலிசுக்கு ஏன் சொல்லவில்லை?

சாட்சி: (மௌனம்)

நீதிபதி: நீர் எங்கே பார்க்கிறீர். என்னைக் கவனிக்காவிடில் நடவடிக்கை எடுப்பேன்!

ஜி. ஜி: 3-ம், 4ம் எதிரிகளை எப்ப அறியவந்தீர்?

சாட்சி: (மௌனம்)

ஜி. ஜி: நீர்தான் இந்த எதிரிகளை இந்த வழக்கில் மாட்டினீர். பொலிசாரிடம் நீர் கொடுத்த வாக்குமூலத்தில் 3-ம், 4-ம் எதிரிகளின் பெயர் இருக்கிறது. இப்போது மறுநாள் காலை தெரியவந்ததாகக் கூறுகிறீர்.

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: இன்ஸ்பெக்டர் உமது வாக்குமூலத்தை வாசித்துக் காட்டினாரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: இன்ஸ்பெக்டர் வாசித்துக்காட்டி, சரியென்றபின் நீர் கையெழுத்துப் போட்டதாகச் சொன்னால் அது பொய்.

சாட்சி: ஆம்பொய். (சிரிப்பு.)

ஜி. ஜி.: தன்னை யார் சுட்டதென்று நாகர் கூறியதாக நீ பொலிசாரிடம்சொன்னீர்?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி.: அப்படி எழுதியிருந்தால் அது பொய்!

சாட்சி: ஆம் பொய்.

ஜி. ஜி.: நாகம்மா தன்புருஷனை சுப்பிரமணியம் சுட்டதாக குளறியதென்றால் அதுபொய்.

சாட்சி: ஆம்.

ஜி. ஜி.: சாட்சியத்தின் போது நாகம்மா அப்படி குளறியதாக ‘கூறியிருக்கிறீர். உமது வாயாலேயே பொய் சொல்கிறீர்.

நீதிபதி: கோர்ட்டில் போன தடவை அப்படி சொன்னீரா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி.: முன்பு சொன்னது பொய்.

சாட்சி: மெய்.

ஜி. ஜி: இப்ப சொன்னது பொய்யா? தப்ப ஏலாது.

சாட்சி: (மௌனம்).

நீதிபதி: இன்று சொன்னீர், ‘நாகம்மா பெயர் சொல்லி குளறவில்லை’யென்று, போன தடவை பெயர் சொல்லி குளறியதாக கூறினீர் எது பொய்?

ஜி. ஜி: எது பொய் எது மெய், சொல்லும் ஆபத்தப்பத்தியது காணும் (சிரிப்பு)

நீதிபதி: இன்று முன்றுநாகு தடவை நாகம்மா பெயர் சொல்லி குளறவில்லையென கூறியிருக்கிறீர்? எது உண்மை

சாட்சி: (மௌனம்)

# 10 கழகங்கள் கலந்துகொள்ளும் கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

இம்மாதம் 10-ந் திகதி யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் வாலிபர் மகாநாடு நடைபெறுவதனை யொட்டி காங்கேசன் துறை கம்யூனிஸ்ட் கட்சிக் கிளை கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றினை நடத்தி வருகிறது. இச்சுற்றுப்போட்டியில் 10 விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றுகின்றன. போட்டிகள் யாவும் காங்கேசன் துறை ஸ்புட்னிக் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

வல்வெட்டித்துறை யங்கம்பன் கோஷ்டிக்கும், சுன்னுகம் ஜெக்கட் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டி வெளிச்சம் போதியதாக இல்லாமையினுல் ஆட்டம் இடையில் நிறுத்தப்பட்டது. திரு. கந்தவனம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

ஸ்புட்னிக் விளையாட்டுக் கழக 'பி' பிரிவுக் கோஷ்டிக்கும் கலட்டி விளையாட்டுக் கழகக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் 2–1 ஆட்டங்களால் கலட்டிக் கோஷ்டி வெற்றியீட்டியது. திரு. தி. செல்வராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

கரவெட்டி உதயதாரகைக் கோஷ்டிக்கும் காங்கேசன் துறை ஸ்புட்னிக் 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் ஸ்புட்னிக் 2-0 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. திரு. வி. முருகேசு மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## இடமாற்றம்

வவனியா, ஞாயிறு

வவனியா, கோவிற்புதுக்குளம் ஸ்ரீ கணேசவித்தியா சாலையில் உதவியாசிரியராகக் கடமையாற்றிய திரு. க. பேரம்பலவ இம்மாதம் தொடக்கம் விடத்தற்பளை கமலாசனி வித்தியாசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவர் வவனியாத் தமிழ் ஆசிரிய சங்கக் காரியதரிசியாவார்.

வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் உதவியாசிரியையாகக் கடமையாற்றிய திருமதி தெ. பேரம்பலம் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்துக்கு இம்மாதம் முதல் மாற்றப்பட்டுள்ளார்.

## "சனசமூக நிலைய வளர்ச்சி மக்கள் கையிலேயே தங்கியுள்ளது"

வேலணை, ஞாயிறு

"சனசமூக நிலையங்களுக்கு கொடுக்கப்படும் நன்கொடைப் பணத்தை அரசாங்கம் குறைத்து வருகிறது. இனி வரும் காலத்தில் அரசாங்க நன்கொடைப் பணம் கிடைக்குமென்று நம்பமுடியாமலிருக்கிறது. அதை நிவர்த்தி செய்யும் பொருட்டு மக்கள் சுயமாகவே தமது ஒத்துழைப்பின் மூலம் சனசமூக நிலையங்களின் வளர்ச்சிக்கு உதவி புரியவேண்டும். இன்றைய அரசாங்கம் பொருளாதார பலமின்றி நடுக்கடலில் நின்று தத்தளிக்கிறது. எனவே நாம் நம்முடைய நாட்டு முன்னேற்றத்துக்கு இன்றைய வகையில் உழைக்கவேண்டும்".

இவ்வாறு வேலணைக் கிராம சபைத் தலைவர் திரு. க. சதாசிவம் வேலணை மேற்கு காந்தீய சனசமூகநிலையப் பொதுக் கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறினுர். திருவாளர்கள் சி. கந்தையா, நா. சரவணமுத்து, பே. சந்திரசேகரம், நா. சிவஞானம், நா. துரைச்சாமி, ச. சபாரத்தினம், ஆ. பொ. சண்முகநாதன் ஆகியோர் நிலைய வளர்ச்சி பற்றிச் சொற்பொழிவாற்றினர். கூட்ட முடிவில் புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திருவாளர்கள் க. நாகரத்தினம், துணைத் தலைவர்: க. பேரம்பலம், செயலாளர்: ஆ. துரைராசா, துணைச் செயலாளர்: து. திருச்செல்செல்வம், பொருளாளர்: நா. துரைச்சாமி.

## வானொலி நிகழ்ச்சிகள்

### திங்கள் 4-3-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6–55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8–15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6–45 வயலின்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7–30 கே. நடராஜா — பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 தமிழ் மூலம் சிங்களம், 9-30 தேர்ந்தஇசை, 9-45 நீலா இராமசாமி — வீணை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6–50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7–05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7–30 செய்திக்குறிப்புகள், 7-35 கமலா — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 வி. பிரேமலதா — வீணை, 1-30 குரலிசை, 1-50 வாத்தியஇசை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6–20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7–30 இம்மாதப் பாடல், 7-35 இலக்கிய ஏடு, 7–40 சர்வகலாசாலைகளுக்காக: மாணவர் குரல்: கதம்ப நிகழ்ச்சி, 8-00 நமது கடமை— பேச்சு. 8-15 சென்னை அஞ்சல், 8–30 இசைக்கோவை, 9-30 கமலா — பாட்டு.

## ஐக்கிய விளையாட்டு கழகம் சாம்பியன்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வல்வெட்டித்துறை கம்பர் மலையங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தினுல் நடாத்தப்பட்ட கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வல்வெட்டித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது.

"ஏ" பிரிவில் சாம்பியனுகத் தெரிவுசெய்யப்பட்டலை தயிட்டி ஸ்டார் கோஷ்டியும் 'பி' பிரிவில் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்ட வல்வெட்டித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் கலந்துகொண்ட சாம்பியன் போட்டி மிக விறுவிறுப்பாக இருந்தது. முதலாவது ஆட்டத்தை தையிட்டி ஸ்டார் கோஷ்டி வெற்றிபெற்றதாயினும் மற்றைய இரு ஆட்டங்களையும் ஐக்கிய விளையாட்டுக் கழகம் வென்றது.

திரு. ஏ. நேசதுரை மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர். தையிட்டி ஸ்டார் போட்டி முடிவை ஆட்சேபித்து, மீண்டும் ஒருமுறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடன் விளையாடச் சந்தர்ப்பம் தருமாறு விளையாட்டுக் கழக நிர்வாகிகளைக் கேட்டுள்ளனர்.

## அங்கத்தவர் ராஜினுமா

மாவிட்டபுரம், ஞாயிறு

தெல்லிப்பளை கிராமசபை 4-ம் வட்டார அங்கத்தவர் திரு. வ. கந்தையா தமது அங்கத்தவர் பதவியை ராஜினுமாச் செய்துள்ளார்.

இவர் தலைமையாசிரியராகப் பணிபுரிந்துவரும் கீரிமலை நகுலேஸ்வரவித்தியாலயத்தை அரசினர் பொறுப்பேற்றுக் கொண்டமையே ராஜினுமாவுக்குரிய காரணமாகும்.

## ஆசிரியர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்துவந்த திரு. க. சபாபதிப்பிள்ளை காங்கேசன்துறை றேமன் கத்தோலிக்கப்பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிருர்.

காங்கேசன்துறை றேமன் கத்தோலிக்க பாடசாலையிலிருந்து சமயப்பிரசாரகரான ஆசிரியர் திரு. நா. ஆறுமுகம் நகுலேஸ்வர வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

# 'எண்ணெய்க் கம்பனிகள் விபரம்தெரிவிக்க வேண்டும்'

## பார்லிமெண்டின் அங்கீகாரம் கோரப்படும்

கொழும்பு, சனி

வெளிநாட்டு எண்ணெய்க் கம்பெனிகளிடமிருந்து பெட்ரோலியம்கார்ப்பரேஷனுல் எடுத்துக்கொண்ட சொத்துக்களுக்கான நஷ்டஈடுகள் குறித்து இந்தக் கம்பனிகள் விபரம் தெரிவிக்கக் கோருவதற்கான பார்லிமெண்ட் அங்கீகாரத்தை விரைவில் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பபவிருக்கிறது.

எண்ணெய்க் கம்பெனிகள் ரூ. 4 கோடி வரையிலான நஷ்டஈடு நமக்குத் தரப்படவேண்டுமென அரசாங்கத்தைக் கோரியிருந்தன. ஆனுல் இவற்றுக்கான விபரங்கள் எதையும் அவை தெரிவிக்கவில்லை.

பெட்ரோலியம் கூர்ப்பரேஷனின் சட்டவிதிகளுக்கமைய அரசாங்க பிரதான மதிப்பீட்டதிகாரி இதுசம்பந்தப்பட்ட நஷ்டஈட்டு மதிப்பீட்டை நடத்தி வருகிருர்.

இதற்கிடையே மூன்று எண்ணெய்க்கம்பனிகளும்வெளிநாட்டிலுள்ள தமது தலைமைக் காரியாலயங்களுக்கு இலங்கை அரசாங்கம் பெட்ரோல் இறக்கு மதிவிலைக்கு உச்சவரம்பு நிர்ணயம் செய்துள்ளதுபற்றி அறிவித்துள்ளன. இந்தக் கம்பெனிகள் இப்பொழுது மேலிடத்து உத்தரவுகளுக்காகக் காத்திருக்கின்றன.

மூன்றுகம்பெனிகளின் அதிபர்களும் நேற்று உணவு வர்த்தக கப்பல் போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்னவையும் நிதிமந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லவையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினுர்கள்.

---

மாவிட்டபுரம், ஞாயிறு

தெல்லிப்பளை கிராமசபையின் புதிய உப தலைவராக திரு. ந. சுப்பிரமணியம் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

திரு. வன்னியசிங்கம் உப தலைவர் பதவியை ராஜினுமாச் செய்துகொண்டதைத் தொடர்ந்தே இத்தெரிவு நடைபெற்றது.


நாளுக்கு நாள் கடின பாவனைக்கு நிகரற்று விளங்குவது.




கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் காற்சட்டைகளுக்கும் ஷேர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மற்றும் ரோட், மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TA/118

# சம்ஸ்கிருதப் பரீட்சைகள்

## பரீட்சார்த்திகள் கஷ்டம்

சமஸ்கிருத விஸ்வ பரிஷத்தின் புத்தூர்க் கேந்திரத்தினால் சென்ற ஐந்து ஆண்டுகளாக இங்கு நடத்தப்பட்டு வருகிற பம்பாய் பாரதீய வித்யா பவனத்தின் சமஸ்கிருதப் பரீட்சைகள் நேற்றும் இன்றும் வண்ணை நாவலர் வித்தியாசாலையில் நடந்தன. நூற்றுக்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் இம்முறை விண்ணப்பிக்க விரும்பியும் செலாவணிக் கட்டுப்பாட்டினால் கட்டணப்பணமனுப்ப அநுமதி வழங்காமையால் இருபது பரீட்சார்த்திகள் மாத்திரமே விண்ணப்பமனுப்ப முடிந்தது. முந்திய பரீட்சைகளுக்கு அனுப்பிய கட்டணப்பணத்தின் மிகுதியாகப் பம்பாயிலிருந்த பணம் இவர்களுடையகட்டணத்துக்கு ஈடுசெய்து கொள்ளப்பட்டது.

சுங்க இலாகாவில் வினாப்பத்திரங்கள் தாமதப்படுத்தப்படுவதும், உறைகள் பிரித்துப் பார்க்கப்படுவதும், வழக்கமாயிருந்தும் சமீபத்தில் கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. மு. பாலசுந்தரம் கலெக்டருக்கு எழுதியதன் காரணமாக இம்முறை இப்பரீட்சை வினாப்பத்திரங்களும் சென்ற மாதம் இங்கு நடந்த சென்னை அமர பாரதீ பரீட்சைகளின் வினாப்பத்திரங்களும் உரியகாலத்தில் பாதுகாப்பாக வந்து சேர்ந்துவிட்டது.

சென்னை அமரபாரதீ பரீட்சா சமிதிக்கு விரைவில் இங்கு ஒரு கிளை நிறுவிப் பரீட்சைக் கட்டணத்தைச் சென்னைக்கு அனுப்பாமல் இங்கேயே வைத்திருந்து பரிசுகளுக்கு உபயோகிப்பதற்கு ஷ புத்தூர்க் கேந்திரம் ஆயத்தம் செய்கிறது

# மாவிட்டபுரத்தில் ஒருவர் சுட்டுக்கொலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொல்லும் எடுத்து அடித்துத் தாக்கினார்கள். துரத்தும் போது இறந்தவரும் காயமடைந்தவரும் ஓடினர். பாடசாலையைக் கடக்கும்போது தான் யாரோ சுட்டனர்.

நீதிபதி குசினிலையயும், உடைந்த சட்டிபானைகளையும் பார்வையிட்டார். இச்சம்பவத்தை நேரில் எவரும் பார்க்கவில்லை என்று நீதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது. சம்பவத்தை முதன் முதல் தந்தி மூலம் தெரிவித்த மாரிமுத்து நாகலிங்கம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

சந்தேக நபர்களின் வீட்டுக்கு எதிர் வீடு எனது டையது. சந்தேக நபர்கள் மூவரையும் எனக்குத் தெரியும். நேற்று மாலை 3 மணியளவில் எனது தம்பியின் வீட்டில் பிரார்த்தகினச் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டிருந்தேன்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது வெடிச்சத்தம் கேட்டது. அந்தச் சத்தம் துவக்கு, அல்லது வெடி அல்லது கைக்குண்டு ஆகிய வற்றின் சத்தமென்று எனக்குத் தெரியாது. வெடிச்சத்தம் சந்தேக நபர்களின் விட்டுப்பக்கமாகவே கேட்டது. உடனே அந்தப்பக்கமிருந்து அழுகுரலும் வந்தது. நான் சாப்பாட்டை விட்டுவிட்டு கையைக் கழுவிக்கொண்டுஓடி வந்தேன். சந்தேக நபர்களின் வீட்டுப் படலைக்கு முன்னால் இருவர் இறந்துகிடந்தனர். காலஞ்சென்றவரின் தலையும் உடலும் படலைத் தூண்களுக்கிடையில் ஒழுங்கையிலும், கால்பக்கம் சந்தேக நபரின் வளவுக்குள்ளும் இருந்தது. மற்றவர் ஒழுங்கையில் கிடந்தார். அவரின் கால்கள் காலஞ்சென்றவரின் தலையுடன் முட்டியபடி இருந்தன. இறந்தவரின் உடலில் அசைவு இல்லை. காயககாரர் இரு கால்களையும் அசைத்தபடி கிடந்தார். இறந்தவரை எனக்குத் தெரியும். மற்றவரை எனக்குத் தெரியாது. இருவருக்கும் காயமிருந்தது.

### பார்த்தவர்கள் எவருமில்லை

இதன்பின்னர் பொலிசார் நீதிபதியிடம் துப்பாக்கிச் சம்பவத்தைப் பார்த்தவர்கள் ஒருவருமில்லை எனத் தெரிவித்தனர். நீதிபதி மரணவிசாரணையைப் பார்க்க வந்திருந்த நூற்றுக்குமதிகமானவர்களிடம் யாராவது இச்சம்பவம்பற்றி வாக்குமூலமளிக்க விரும்பினால் முன் வரும்படி அறிவித்தார். ஆனால்ஒருவரும்வாக்குமூலமளிக்க வரவில்லை. நீதிபதி இறந்தவரின் உடலைப் பரிசோதனை செய்யும்படி காங்கேசன் துறை டி. எம். ஓ.வுக்கு உத்தரவிட்டு சந்தேகநபர்களான சகோதரர்கள் சின்னத்தம்பி இராசையா, கனகரத்தினம், பாலசிங்கம் ஆகிய மூவரையும் இம்மாதம் 8-ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு மேல்விசாரணையை ஒத்திவைத்து காங்கேசன்துறைப் பொலிசாரை மேற்கொண்டு விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டார்.

காங்கேசன்துறை தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. போவி, உதவி இன்ஸ்பெக்டர் திரு. கந்தையா ஆகியோர் இச்சம்பவம் சம்பந்தமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

---

# சிறுவன் பரிதாப மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

வீழ்த்தப்பட்ட ஒரு மரத்தின் கிளையொன்றுக்குள், எதிர்பாராதவிதமாக சிக்குண்டு ஆறு வயதுச் சிறுவன் பரிதாபகரமாக மரணமான சம்பவம் கொட்டடியில் நிகழ்ந்துள்ளது.

கொட்டடியில் மரமொன்று வெட்டி வீழ்த்தப்பட்டிருந்தது. இந்த மரத்தின் கிளையொன்று நிலத்தில் முற்றாக விழாமல் இருந்தது. மரம் தறிக்கப்பட்ட இடத்துக்குச் சமீபத்தில் விளையாடிய சில சிறுவர்கள், இந்த கிளையின் பக்கத்தில் வந்தனர். அந்த நேரத்தில் வீசிய ஒரு காற்று அந்தக் கிளையை நிலத்துடன் சாயவைத்தது. அந்தச் சமயத்தில் எதிர்பாராதவிதமாக இரு சிறுவர்கள் அந்தக் கிளைக்குள் மாட்டிக்கொண்டனர். இவர்களில் ஒருவரான அருளப்பு தேவப்பிரியம்; சிறிது நேரத்தின்பின் மயக்கமான நிலையில் வெளியே எடுக்கப்பட்டார். பின்னர் மரணமானார்.

மரண விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் விபத்தினால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

---

# ஆத்மசாந்திக்கு அகண்டநாமஜெபம்

யாழ்ப்பாணம், திங்கள்

திவ்வியஜீவன சங்கத்தின் ஆதரவில் கந்தர் மடம் கந்தபுராணமடத்தில் சென்ற சனிக்கிழமை மாலை கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றபோது காலஞ் சென்ற டாக்டர் ராஜேந்திரப்பிரசாத்தின் ஆத்மசாந்திக்காக அகண்டநாமஜெபமும் மௌனப் பிரார்த்தனையும் இடம் பெற்றன.

# "கொழும்பு மகாநாடு மீண்டும் தேவையில்லை"

—அல் அஹ்ராம்

கெய்ரோ, மார்ச் 3

சீன-இந்தியத்தகராறு பற்றி கொழும்புநாடுகளின் இரண்டாவது மகாநாடு ஒன்று அவசியமில்லையென கெய்ரோ பத்திரிகை "அல் அஹ்ராம்" கூறியது.

---

# சோவியத் துருப்புக்கள்

லண்டன், மார்ச். 3

ஹவானாவிலிருந்து 2000 சோவியத் துருப்புக்கள் நேற்று ஒரு சோவியத் கப்பலில் புறப்பட்டுச் சென்றதாக ஒரு செய்தி கூறுகிறது.

# "பத்தரைமாற்று தங்கம்"

—வினோபா

கல்கத்தா, மார்ச் 3

"டாக்டர் ராஜன்பாபு ஒரு பத்தரை மாற்றுத் தங்கம்" என ஆச்சார்யா வினோபாஜீ கூறினார். அவரது நினைவாக மேற்கு வங்க கிராமம் ஒன்று பூதானம் செய்யப்பட்ட போது இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

# இன்று

திவ்விய ஜீவன சங்கத்தின் ஆதரவில் இன்று மாலை 5-மணிக்கு யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள தையல் பாடசாலையில் ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ச ஜயந்தி தினம் கொண்டாடப்படும். கூட்டுப் பிரார்த்தனையும் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

---

# கிராமசபை உபதலைவர் தெரிவு

தெல்லிப்பழை, ஞாயிறு

தெல்லிப்பழை கிராமச்சபை மண்டபத்தில் இன்று திரு. க. செல்வரட்ணம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கீரிமலை வட்டார அங்கத்தவர் திரு. நல்லையா சுப்பிரமணியத்தின் பெயரை திரு. க. சின்னத்துரை பிரேரிக்க, திரு. சி. குணரட்ணம் ஆமோதிக்க தெல்லிப்பழை கிராமச்சபையின் உபதலைவராக போட்டியின்றி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

---

# அரிசி விலை அதிகரிப்பு

## சமசமாஜக் கட்சி கண்டன தீர்மானம்

கொழும்பு, ஞாயிறு

"அரிசி மா, ஆகியவற்றின் விலையையும் சமீபகாலத்தில் சீனியின் விலையையும் அரசாங்கம் அதிகரித்துள்ளதை இலங்கை சமசமாஜக் கட்சியின் யாழ். பிரதேசக் கிளை வன்மையாகக் கண்டிக்கிறது. விலைகளின் அதிகரிப்பு மாகாணத்துக்கு மாகாணம் வித்தியாசப் படுவதால், ஏற்படும் பளு யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் கொடூரமாக உள்ளது. சதாரணப் பொது மக்களின் உணவுப் பொருள்களில் இவ்வாறு விலை அதிகரிப்பதை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என அரசாங்கத்தை பிரதேசக்கிளை கோருகின்றது".

# டென்ஸிங்குக்கு உயர்ந்த கௌரவம்

மாஸ்கோ, மார்ச் 3

எவரெஸ்ட் சிகரத்தை வெற்றி கொண்ட இந்திய மலையேறும் வீரர் டென்ஸிங் நோர்கேக்கு, ரஷ்ய விளையாட்டுஸ்தாபனங்கள் விசேஷ நிகழ்ச்சி ஒன்றில் மிக உயர்ந்த விளையாட்டு ஸ்தாபனப் பதக்கம் ஒன்றை அளித்துக் கௌரவித்தனர். சோவியத் பிரஜை அல்லாத ஒருவருக்கு இப்பதக்கம் அளிக்கப்பட்டது இதுதான் முதற் தடவை. 1500 விளையாட்டு வீரர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

---

# 'இலங்கையின் நடத்தை சரியே'

—இந்தோனேஷிய மந்திரி

ஜாகர்த்தா, மார்ச் 3

அமெரிக்காவுக்கு இலங்கை தலைவணங்க மறுத்தது சரியே என, இந்தோனேஷிய சுரங்க மந்திரி கூறினார். "மற்றோர் தேசத்தின் விருப்பத்திற்கு தலைவணங்க மறுத்தது சரியான காரியம். நிதி உதவிக்காக சுதந்திரத்தை விலை கூறமுடியாது" என்றும் அவர் கூறினார் எண்ணைகம்பெனி பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையிலேயே இவவாறு அவர்கூறினார்.

# 54 ராத்தல் பால் கொடுக்கும் பசு

புதுடில்லி, மார்ச் 3

கறவை மாடு போட்டியில் ஹலியானா கிராமத்தைச் சேர்ந்த ஒருபசுவுக்குப் பரிசு கிடைத்தது. நாள் ஒன்றுக்கு இது 54 ராத்தல் பால் கொடுக்கிறது.

---

# இலவச விளம்பரம்

புதுடில்லி, மார்ச் 3

10000 பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் ரூ.5 லட்சம் பெறுமான 55 அரசாங்க பாதுகாப்பு விளம்பரங்களை இலவசமாகப் பிரசுரித்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

---

# ஒரிஸாவில்

புதுடில்லி, மார்ச் 3

ஒரிஸாவில் 2500 திபேத்தியர்களைக் குடியமர்த்துவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

---

# ரஷ்யாவில் தேர்தல்

மாஸ்கோ, மார்ச் 3

ரஷ்யாவில் பார்லிமெண்டுக்கும், 9 குடியரசுகளுக்கும் இன்று தேர்தல்கள் நடைபெற்றன. திரு. குருஷ்சேவ் மாஸ்கோ தொழில் ஜில்லா ஒன்றில் தேர்தலுக்கு நிற்கிறார்.


விரைவில் எதிர்பாருங்கள் !

வீர காவியம் !!

சினிமாஸ் திரைகளில்

புதுமையான காதல் ! புரட்சிகரமான வீரம்!!

திகைப்பூட்டும் திரைகடல் ஓவியம் !!!

★ பார்த்தோர் பரவசப்படுகிறார்கள்

★ பார்க்காதோர் பார்க்கத் துடிக்கிறார்கள்!

சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
சாவித்திரி
முத்துலட்சுமி
வி. நாகையா
குமாரி ருக்மணி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பையா
ஏ. கருணாநிதி




மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

கப்பலோட்டிய தமிழன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) அஞ்சலி - ராமாராவ் நடித்த பாலநாகம்மா

மனோகரா (யாழ்ப்பாணம்) சிவாஜி கணேசன் சரோஜா தேவி நடித்த பாகப்பிரிவினை


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.